கண் வைத்திய நிபுணர்கள் சோதித்து சிபார்சு செய்யும் கண்ணாடிகளை சரியாக வழங்குபவர்கள்
எஸ். எம். பெர்னாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி, (இலங்கை வங்கிக்கு அருகில்) யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

OPTICIANS
SIGHT TESTED
PRESCRIPTIONS
ACCURATELY
DISPENSED
S. M. FERNANDO
580, HOSPITAL ROAD,
(Near Bank of Ceylon)
JAFFNA.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 வைகாசி 08 ஞாயிற்றுக்கிழமை (22 - 05 - 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 175

# விமானக் கொள்வனவை நிறுத்துமாறு சிறிமாவுக்கு ராணுவக் குழு ஒன்று கடிதம்

## ஜனாதிபதி தேர்தல்முன் பெருந்தொகை பணத்தை கமிஷனாகப் பெற முயற்சி

கொழும்பு, மே 22

லொக்ஹீட் சீ - 130 ரகத்தைச் சேர்ந்த இரு போக்குவரத்து விமானங்களை கொள்வனவு செய்வதை நிறுத்தும்படி அரசுக்கு அழுத்தம் கொடுக்குமாறு இராணுவ அதிகாரிகள் குழு ஒன்று எதிர்க்கட்சித் தலைவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவைக் கேட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது;

திருமதி பண்டாரநாயக்காவுக்கு அனுப்பிய கடிதத்தில் இராணுவக் குழு இந்தக் கோரிக்கையை விடுத்திருக்கிறது.

இக்கடிதத்தின் பிரதிகள் மேல்மாகாண முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்கா லஞ்ச ஆணையாளர், திறைசேரிச் செயலாளர் மற்றும் எதிரணி எம். பிக்கள் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கடிதத்தில் கூறப்பட்டிருப்பதாவது:

லொக்ஹீட் நிறுவன முகவர்கள் சீ—130 ரக விமானங்கள் இரண்டை இலங்கை விமானப்படைக்குவிற்பது தொடர்பாக படை அதிகாரிகளுடன் பேச்சுகள் நடத்தி வருகின்றனர்.

பாதுகாப்பு அமைச்சின் மிக உயர் நிலை அதிகாரியின் வழி நடத்தலின் கீழ் இப்பேச்சுகள் நடத்தப்படுகின்றன. இக் கொள்வனவு இடம்பெறுமாயின் பாதுகாப்புத்துறை உயரதிகாரிகளுக்கு மிகக்கூடிய தொகைப்பணம் கமிஷனாக கிடைக்கும்.

இவ்விரு விமானங்களை கொள்வனவு செய்ய அரசுக்கு 245 கோடி ரூபா செலவாகும். பாதுகாப்பு அதிகாரிகளுக்கு கூடுதல் கமிஷனைக் கொடுக்கும் கொள்வனவைத் தடுக்க எதிர்க்கட்சியின் தலையீடு அத்தியாவசியமாகிறது.

இவ்வாண்டு நவம்பரில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பதாக இவ் விமானக் கொள்வனவை நடத்தி முடிப்பதில் படை அதி

(2 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



இப்படி கமிஷன் அடிக்கிறவை சமாதானம் பற்றிச் சிந்திப்பினமா பாருங்கோ..!

## தென் யேமன் தனிநாடு பிரகடனம்

சனா, மே 22

தென் யேமன் தன்னைத் தனிநாடாக நேற்று பிரகடனம் செய்து கொண்டது.

1990 ஆம் ஆண்டில் ஒரே நாடாக இணைந்த யேமனின் உதவி ஜனாதிபதியான தென் யேமனைச் சேர்ந்த அலி சலீம்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## 8 வருடத்தின் பின் சுதந்திரக்கட்சியில் நிறைவேற்றுக்குழு நாளை கூடுகிறது

### தலைமைத்துவம் பற்றி முக்கிய முடிவு

கொழும்பு, மே 22

எட்டு ஆண்டுகால இடைவெளியின் பின்னர் நாளை கொழும்பில் கூடவுள்ள சுதந்திரக்கட்சியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில், கட்சியின் தலைமைத்துவம் பற்றிய முக்கிய முடிவு எடுக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் தாய்க்கும் மகளுக்கும் இடையே போட்டியேற்படலாம் என்று எதிர்பார்க்கப் படுவதாக பி. பி. ஸி சிங்களச் சேவைச் செய்தியாளர் எல்மோ பெர்னாண்டோ தெரிவித்திருக்கிறார்.

இதுபற்றி கருத்து வெளியிட்ட பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் டி. எம். ஜயரத்தினா, தலைமைத்துவம் சம்பந்தமான தீர்மானம் ஒருமனதாக இருக்கும் என்றும் தெரிவித்தார்.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் தலைமைத்துவம் குறித்து சந்தேகமோ, பிரச்சினைகளோ இல்லை என்றும் அவர் வலியுறுத்தினார். (இ-எ-6)

## ஜனாதிபதி வேட்பாளராக சந்திரிக்காவை நிறுத்தும் கோரிக்கை வலுக்கிறது

கொழும்பு, மே 22

தென்மாகாணத்தில் பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசசபைத் தலைவர்களும் உபதலைவர்களும் கடந்த வியாழன் கூட்டம் ஒன்றை நடத்தினர்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளராக சந்திரிக்காவையே நியமிக்கும்படி முன்னணியைக் கோரும் தீர்மானம் ஒன்று அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

சிறுபான்மையினர் மற்றும் இளைஞர்களின் ஆதரவையும் நம்பிக்கையையும் வென்றெடுக்கும் ஆற்றல் சந்திரிக்காவுக்கே உண்டு.

இவ்வாறு விக்டர் ஐவன் தெரிவித்திருக்கிறார். (இ-எ-6)

## வேட்பாளர் யார் என்ற பிரச்சினைக்கே இடமில்லை

### சிறிமாவோ நேற்று அறிக்கை

கொழும்பு, மே 22

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஜனாதிபதி வேட்பாளராகத் தம்மை நியமித்துள்ளதால் நாளை நடக்கவிருக்கும் சுதந்திரக்கட்சி நிறைவேற்றுக்குழுக் கூட்டத்தில் வேட்பாளர் ஒருவரைத் தெரிவு செய்யும் பிரச்சினை எழாதென்று திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

அவர் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் இதனைத் தெரிவித்திருக்கிறார்.

இதேவேளை—திருமதி பண்டாரநாயக்காவின் அறிக்கை பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஆதரவாளர்களை அதிர்ச்சி அடைய வைத்திருப்பதாக ராவய ஆசிரியர் விக்டர் ஐவன் தெரிவித்தார்.

ஆட்சி மாற்றத்தை எதிர்பார்க்கும் மக்கள் சந்திரிகாவே வேட்பாளராக நியமிக்கப்பட வேண்டும் என்று விரும்பும் இந்த நேரத்தில் திருமதி பண்டாரநாயக்கா இப்படி ஒரு அறிக்கையை விடுத்திருக்கிறார் என்றும் ஐவன் தெரிவித்தார். (இ-எ-6)

## பருத்தித்துறைகடலில் மோதல் 7 கடற்புலிகள் வீரச்சாவு

யாழ்ப்பாணம், மே 22

கடந்த வியாழன் இரவு பருத்தித்துறைக் கடற்பரப்பில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த விடுதலைப் புலிகளின் கடற் புலிகளுக்கும் அங்கு திடீரென வந்த கடற்படை யுத்தக் கப்பலுக்கும் இடையே மோதல் சம்பவம் ஒன்று இடம் பெற்றது.

அந்த மோதலின்போது ஒரு பெண் போராளி உட்பட ஏழு கடற்புலிகள் வீரச்சாவடைந்தனர்.

வீரச்சாவடைந்த கடற் புலிகளின் விவரம் வருமாறு:-

★ மேஜர் மேனன் அல்லது கலைவாணன் (முருகேசு ஜெகதீஸ்வரன்— உவர்மலை, திருமலை)

★ மேஜர் குணா அல்லது சாலிஸ் (திருநாவுக்கரசு நமசிவாயம்—ஊறணி, காங்கேசன்துறை)

★ கப்டன் குரலவன் அல்லது குகா (செல்வரத்தினம் முருகமூர்த்தி — சுப்பர்மடம், பருத்தித்துறை)

★ கப்டன் மணாளன் (குலசேகரம் ஸ்ரீரஞ்சன் — பெரியகுளம், 6 ஆம் கட்டை, திருமலை)

★ கப்டன் கணேஸ் (சோமசுந்தரம் ரவிச்சந்திரன்—டச்சு வீதி, மானிப்பாய்)

★ மேஜர் வசந்தன் (சித்திரவேல் ரஜி—சக்தி, திருமலை)

★ கப்டன் சாமந்தி அல்லது சஞ்சிகா (தங்கராசா சுதர்சினி—சிவன் வீதி, உரும்பராய்) (இ-5)

## ஊர்திப் பவனியும் அஞ்சலிக் கூட்டமும்

யாழ்ப்பாணம், மே 22

பருத்தித்துறைக் கடற்பரப்பில் வீரச்சாவடைந்த வேங்கைகளின் நினைவுருவப் படங்களைத் தாங்கிய ஊர்திப் பவனியும் அஞ்சலிக் கூட்டங்களும் இன்று வலிகாமம் மற்றும் வடமராட்சிப் பகுதிகளில் நடைபெறவுள்ளன.

இன்று முற்பகல் 10 மணியளவில் உரும்பராய் சந்தியில் இருந்து புறப்படும் ஊர்தி புன்னாலைக்கட்டுவன், சுன்னாகம், தொட்டிலடிச் சந்தி, சங்கானை, சித்தன்கேணி, வட்டுக்கோட்டை, அராலி, சங்கரத்தை, நவாலி, மானிப்பாய், யாழ்ப்பாணம் நாவாந்துறை, குருநகர் பகுதிகளூடாக பவனிவரும். குருநகரில் பிற்பகல் ஒரு மணிக்கு நினைவஞ்சலிக் கூட்டம் நடைபெறும். பின்னர் அங்கிருந்து பாஷையூர் அரியாலை, நல்லூர், திருநெல்வேலி, கொக்குவில் சந்தி, தாவடி, மருதனார்மடம் வழியாக மானிப்பாயை சென்றடையும்.

இன்று பிற்பகல் 3 மணிக்கு நினைவுருவப் படங்கள் மானிப்பாய் மெமோறியல் கல்லூரியில் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்படும். அஞ்சலிக் கூட்டமும் அங்கு இடம்பெறும்.

தொடர்ந்து ஊர்தி சுதுமலை, கோண்டாவில் ஊடாக கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தை அடைந்து அங்கு நினைவுக்கல் நடப்படும்.

வடமராட்சியில்

வேங்கைகளின் நினைவுருவப் படங்களைத் தாங்கிய ஊர்தி முற்பகல் 10 மணியளவில் சுப்பர் மடம் பகுதியில் இருந்து ஆரம்பமாகி பருத்தித்துறையிலும் நெல்லியடியிலும் மக்கள் அஞ்சலிக்காக நிறுத்தப்படும்.

தொடர்ந்து ஒஞ்சர்கடை, சனாம் வீதி, நவிண்டில், உடுப்பிட்டிச் சந்தி வழியாக வல்வெட்டித்துறைக்குச் செல்லும். அங்கு அஞ்சலிக் கூட்டம் பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும். பின்னர் பொலிகண்டி மாவீரர் துயிலும் இல்லத்தில் நினைவுக்கல் நடப்படும். (இ-5-15-17-162)

## குடாநாடு சோகமயம்

யாழ்ப்பாணம், மே 22

பருத்தித்துறை கடற்பகுதியில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த வேளை கடற்படையினருடன் இடம்பெற்ற மோதலில் வீரச்சாவடைந்த போராளிகள் ஏழு பேருக்கும் குடாநாட்டில் நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது.

பல பகுதிகளிலும் சோக கீதம் ஒலிபரப்பப்பட்டது. பிரதான சந்திகளிலும், வர்த்தக நிலையங்களிலும் கறுப்புக் கொடிகளும், தோரணங்களும் கட்டப்பட்டிருந்தன. வாகனங்களிலும் கறுப்பு கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன.

யாழ் நகரில் மத்திய பேரூந்து நிலையம் உட்பட முக்கிய சந்திகளில் நேற்று முழுநாளும் ஒலிபெருக்கிகளில் சோக கீதம் ஒலித்துக் கொண்டிருந்தது. வீதிகளில் கறுப்புக் கொடிகளும், தோரணங்களும் கட்டப்பட்டிருந்தன. (இ-5-15-17-162)

## உதவிச் செயலாளர்கள் ஜனாதிபதியால் நியமனம்

கொழும்பு, மே 22

ஐக்கிய தேசியக்கட்சியின் புதிய உதவிச் செயலாளர்களை ஜனாதிபதி நியமித்துள்ளார்

காமினி ஜெயவிக்ரமபெரேரா டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனா, தயாபெல்பொல, பியசேன எஸ். அபேவிர, விஜித அபேவர்த்தனா ஆகியோரே புதிய உதவிச் செயலாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்

இவர்களில் திரு. தயாபெல்பொல, காமினி திஸநாயக்காவின் அந்தரங்கச் செயலாளராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது,

ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய பதவி விலகிய உதவிச் செயலாளர்களில் காமினி ஜெயவிக்ரமபெரேரா டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா ஆகியோர் மீண்டும் உதவிச் செயலாளர்களாக நியமிக்கப்பட்டிருக்கின்றனர். (இ-எ-6)

## சந்திரிக்காவுக்கு ஆதரவாக கையெழுத்து வேட்டை!

கொழும்பு, மே 22

திருமதி சந்திரிகா குமாரணதுங்காவை பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்க வேண்டும் என்று கோரும் மகஜர் ஒன்றில் மேல்மாகாண சபை உறுப்பினர்கள் கையெழுத்துகளை வாங்கி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

சுதந்திரக் கட்சி வட்டாரங்களை மேற்கோள் காட்டி இத்தகவலை கொழும்புப் பத்திரிகை ஒன்று வெளியிட்டுள்ளது. (இ-எ-6)

## அரச சேவையில் சேரும் வயதெல்லை அதிகரிப்பு

அரச சேவைக்கு ஆட்களைச் சேர்ப்பதற்கான வயதெல்லையை 40 இல் இருந்து 45 ஆக, உடனடியாக அதிகரிப்பதென அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

அரச சேவையில் உள்ள பதவி வெற்றிடங்களுக்கு கூடிய அடிப்படைக் கல்வித் தகைமைகளை பெற்றிருந்தும் கூடதகுதி பெற்ற காலத்தில் வயது கூடிய காரணத்தினால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் இம் முடிவினால் நன்மை அடைவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

மருத்துவர்கள், பொறியியலாளர்கள் போன்ற தொழில்களுக்கு ஆட்களைச் சேர்த்துக் கொள்ளும் நடைமுறையில் எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் இந்த வயதெல்லை மாற்றம் அமுல் செய்யப்படும் என்று அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா தெரிவித்தார். (இ-எ)

## தமிழரின் முதலாவது வங்கி 'தமிழீழ வைப்பகம்' ஆரம்பம்

### நாளை நண்பகல் திறப்பு விழா

தமிழ் மக்களின் நிதி வளத்தைப் பெருக்கி, தமிழீழப் பொருண்மிய விருத்திக்கு உதவும் விதத்தில் "தமிழீழ வைப்பகம்" என்ற பெயரில் தமிழ்ப் பகுதியின் முதலாவது வங்கி நாளை திங்கட்கிழமை கோலாகலமாகத் திறந்து வைக்கப்பட உள்ளது.

யாழ்ப்பாணம் கன்னாதிட்டியில் அமைந்துள்ள "தமிழீழ வைப்பகம்" நாளை திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு தனது பணியைத் தொடங்குகிறது.

தமிழ் மக்களின் முதலீட்டைக் கொண்டு தொடங்கப்படும் முதலாவது வங்கி "தமிழீழ வைப்பகம்" ஆகும்.

வழமையான வங்கி அலுவல்களான நடைமுறைக் கணக்கு, சேமிப்புக் கணக்கு, நிலையான வைப்புக் கணக்கு என்பனவற்றோடு —

மேம்பாட்டுக் கடன், அடகுக் கடன், வாணிபக் கடன் ஆகிய மக்களுக்கு உதவும் திட்டங்களையும் "தமிழீழ வைப்பகம்" செயற்படுத்த உள்ளது.

தமிழர்களின் வியர்வையிலேயே வந்த தேட்டம், தமிழ் மண்ணுக்கே உரியது. அது தமிழீழத்துக்கு வெளியே தவறியும் சென்றடையக் கூடாது என்ற குறிக்கோளுடனேயே "தமிழீழ வைப்பகம்" ஆரம்பிக்கப்படுகிறது — என்று வைப்பக வட்டாரங்கள் தெரிவித்தன.

வைப்பகம் வழங்கும் கடனுதவிகள் தொழில் வளத்தைப் பெருக்கவும், தற்றொழில் முயற்சிகளை ஊக்குவிக்கவும், அனைத்து நிலைகளிலும் வாணிபத்தை விஸ்தரிக்கவும் பயன்படும் — என்றும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (அ)

## ஐ. நா. படையை இலங்கைக்கு அழைக்கும் நோக்கம் இல்லை

### நாடாளு மன்றத்தில் பிரதமர் ரணில்

ஐ. நா. படைகள் இலங்கை வரமாட்டா, அவ்வாறு அழைப்பதாக வேண்டுகோள் எதுவும் விடுக்கப்படவில்லை,

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இதனை நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

[illegible] சபையிடம் ஐ நா. படைகளை இங்கு வருவிப்பது தொடர்பாக கோரிக்கை ஏதும் [illegible] அரசினால் விடுக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (இ-எ)

## கிராம சேவையாளர்களுக்கு மேலதிக அதிகாரங்கள்

கொழும்பு, மே 22

கிராமசேவை அதிகாரிகளுக்கு சமாதான அதிகாரிகளுக்குரிய அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்று கிராமசேவை அதிகாரிகளின் பணிகள் பற்றி ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழு அரசுக்குச் சிபார்சு செய்துள்ளது

இதன்மூலம் கிராமசேவை அதிகாரிகள் மேலும் சிறந்த சேவையை ஆற்ற முடியும் என்று பொலிஸ் திணைக்களம் கருதுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிராம மட்டத்தில் குற்றச் செயல்களை ஒழிப்பதற்கு இது உதவியாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சரவைத் தீர்மானத்தில் திருத்தம் கொண்டு வருவதன் மூலம் கிராமசேவை அதிகாரிகளுக்கு இந்த அதிகாரத்தை வழங்குவதற்கு முடியும் என்றும் அக்குழு தனது சிபாரிசில் தெரிவித்திருக்கிறது. (இ-எ-162)

## விடுமுறை நாட்களிலும் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், மே 22

ஷ்றொப் நிதி நிறுவனத்தில் வைப்புச் செய்தோருக்கான முதல் தவணைக் கொடுப்பனவு விடுமுறை நாட்களான செவ்வாய், புதன்கிழமைகளிலும் யாழ். அலுவலகத்தில் வழங்கப்படும்.

அரச மற்றும் தனியார் அலுவலகங்களில் பணிபுரிவோர் தமக்குரிய கொடுப்பனவுகளை பெற வசதியாகவே இந்த விசேட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. (அ)

## உலக அழகியாக இந்திய யுவதி

மணிலா, மே 22

உலக அழகியாக இந்தியா, புதுடில்லியைச் சேர்ந்த பதினெட்டு வயதான செல்வி அஸ்மாட்டா இந் நேற்று தேர்ந்தெடுக்கப்பட்டார்.

43 ஆண்டுகளாக நடைபெற்று வரும் உலக அழகிப் போட்டியில் இந்தியப் பெண் ஒருவர் உலக அழகியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-எ-162)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்மார்களுக்கு நற்செய்தி
பளிச்சிடும் வெண்மையை
தந்திடும் ஒரே நீலம்

## றோயல் நீலம்

★ பள்ளிக் குழந்தைகளின் ஆடைகளுக்கு பளிச்சிடும் வெண்மையை தருவது
றோயல் நீலம்
★ வீட்டுத் தலைவன் விரும்பி வாங்கி வருவது
றோயல் நீலம்
★ ஆடைகளுக்கு எந்தவித ஊறும் விளைவிக்காமல், பட்டென பளிச்சிடுவது
றோயல் நீலம் ஒன்றுதான்

தமிழீழத்தில் உத்தரவாதம் பெற்றது
றோயல் நீலம் என்பது பெருமைக்குரியது.

**சில்லறை விலை ரூ. 6-50 மட்டுமே**

சந்தைப்படுத்துவோர்.

**றோயல் இன்டஸ்ரீஸ்,**
பொன்னையா ஒழுங்கை,
ஆனைக்கோட்டை.

(சி-8193)



## அனித்தா பயிற்சி நிலையம்

★ Stocking Net
★ Sugar Craft ★ Facial
★ Bridal Makeup ★ Needle Work
★ Cookery ★ Cake Icing
★ Hair Style ★ Flower Making

வகுப்புக்கள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன
புதிய டிப்ளோமா வகுப்புக்கள்
ஆரம்பமாக உள்ளன.

**PAVALAM SIVASUBRAMANIAM**
பூநாறி மரத்தடி, கே. கே. எஸ். வீதி,
கொக்குவில்.

(இ-8126)



## வார்த்தைகள் வலுவிழந்து போன ஒரு ஆற்ற முடியாத துயரம்

**து. நிதியானந்தன்**
(நித்தி அண்ணன்)

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நெஞ்சில்
சுமந்த நெடு மனிதன்
தமிழீழ விடுதலைப் புலிகளை என்றும்
ஏற்று நின்ற ஒரு புனிதன்

அன்னாரின் பிரிவால் துயருறும் எல்லோருடனும் விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகமும் இணைந்து கொள்கின்றது.

காலத்தால் அழியாத நித்தி அண்ணனர் நினைவுடன் இனியும் தொடரும் எம்பணி.

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

விடுதலைப் புலிகள்
கலை, பண்பாட்டுக் கழகம்
நடுவப் பணியகம்,
தமிழீழம்

(சி/8303)



## கண்ணீர்க் காணிக்கை

ஈழத்து ஒலிப்பதிவு வரலாற்றில் வியத்தகு
சாதனை புரிந்த
சின்கிளேயர் 'நித்தி'
**து. நித்தியானந்தன்**
அவர்களின் எதிர்பாராத மறைவுகேட்டு கலையுலகம் கண்ணீர் வடிக்கிறது!
அவர் பிரிவால் துயருறும் மனைவி மக்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

இளங்கலைஞர் மன்றம்
நல்லூர். (சி/8306)



## கண்ணீர் அஞ்சலி

21-5-94 இல் மறைந்த பிரபல ஒலிப்பதிவாளர்
**துரைராஜா நித்தியானந்தன்**
அவர்களின் மறைவு எமது இசைக் குழுவிற்கு ஓரிழப்பாகும்.

அன்னாருக்கு எமது அஞ்சலியைத் தெரிவிப்பதுடன் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களை தெரிவித்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சாந்தன் இசைக் குழுவினர்
(31033)



சுழிபுரம் பறாளாய் முருகன்
**தேவஸ்தானத்தில்...**
சிங்கள அரசியல்வாதிகளின்
மனோநிலை உடன் மாற்றம்பெற
கந்தன் அருள் வேண்டி

## வைகாசி விசாக விடி விளக்குகள் - 108

வரும் செவ்வாய் (24-05-1994) முருகப் பெருமானின் தேர்த்தினமும் வைகாசி விசாகமும் பௌர்ணமியும் கூடிய விசேடதினமாகிய அன்று இரவு - 7 00 மணியளவில் தமிழீழ மக்களுக்கு ஆறுதலைத் தந்தருளும் ஆறுமுகப் பெருமானுக்கு வைகாசி விசாக விடி விளக்குகள் 108 ஏற்றிவைக்கப்படும்.

விளக்கு ஏற்றிவைப்பவர்:
**பிரம்மஸ்ரீ. சு. ஷண்முகரத்ன சர்மா**
அவர்கள்
(தேவஸ்தான பரிபாலனசெயலர், பூஜாபரம்பரை)
அடியார்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

சோழியூரான்,
அமைப்பாளர்.

[31030]



தமிழீழ வைப்பகம்
## ✱ திறப்புவிழா அழைப்பு ✱

**நாளை 23 - 05 - 94**

நிகழும் 2025 ஆம் திருவள்ளுவராண்டு வைகாசி மாதம் 9 ஆம் நாள் 23-05-94 திங்கட்கிழமை பகல் 12-00 மணியளவில் —

யாழ்நகர் கன்னாதிட்டியில்
அமைந்த தனது பணியகத்திலே
தமிழர் பொருண்மிய வலுவினைப் பெருக்க
தன்பணி தொடங்குகிறது

## 'தமிழீழ வைப்பகம்'

முந்து பணிகள் மூச்சுடன் இயற்ற
தங்களின் உறவே தக்கதென்பதனால்
வந்து கலந்து வாழ்த்திடுமாறு
அன்பு கனிந்து அழைக்கிறோம் வருக.

நிதிப் பொறுப்பாளர்
தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி-8304)


# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மே 22

அளவெட்டி விநாயகர் விளையாட்டுக் கழகம் இணுவிலில் உள்ள மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்கள் வருமாறு:-

பி. ப. 3, மணி: சித்தி விநாயகர் வி. க. எதிர் புங்குடுதீவு அம்பாள்

பி. ப. 4 மணி:- யாழ் ஹென்றீஸ் வி. க. எதிர் சென் அன்ரனிஸ், பாஷையூர்.

★ ★ ★

சிறுப்பிட்டி மேற்கு புத்தூர் மேற்கு பகுதியில் நடைபெறும் கிராமிய பாசறை நிகழ்ச்சியை யொட்டிய விளையாட்டு நிகழ்வாக இன்று கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம் ஆகிய போட்டிகள் இடம் பெறவுள்ளன விவரம் வருமாறு:-

கரப்பந்தாட்டம்
"செற் அப்"

★ நாயன்மார்கட்டு பாரதி வி. க. அணி எதிர் அச்சுவேலி விக்கினேஸ்வர விளையாட்டுக் கழகம்;

வலைப்பந்தாட்டம்

★ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அணி எதிர் கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலய அணி (இ-5)

★ ★ ★

ஐங்கரன் விளையாட்டுக் கழகம் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள கழக மைதானத்தில் நடத்தும் கிரிக்கெட் மற்றும் கரப்பந்தாட்டப் போட்டிகளின் இன்றைய ஆட்டங்களின் விபரம் வருமாறு:-

கரப்பந்தாட்டம் (ஓவர்)

★ பிற்பகல் 4 மணி— நீர்வேலி ஐக்கிய வி. க. அணி எதிர் வளர்மதி வி. க. அணி

கிரிக்கெட்

பிற்பகல் 3 மணி - வேளாங்கன்னி வி. க. அணி எதிர் அடைக்கல அன்னை வி. க. அணி. (இ-5)

★ ★ ★

யாழ் மிட் ரவுண் றோற்றறக்ட் கழகம் யாழ். மல்லாகக் கழக மருத்துவ பீட மைதானத்தில் இன்று நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ ஞானமுருகன் வி. க. எதிர் சென் நீக்கலஸ் வி. க

★ சென் அன்ரனீஸ் வி. க. எதிர் றோயல்ஸ் வி. க

## ஆலயங்களில்

கச்சாய் புங்கடி விநாயகர் கோயில் வைகாசிப் பொங்கல் இன்று ஞாயிற்றுக் கிழமை நடைபெறும். (க)

## புலிகளின் குரல் வானொலியில்

22 - 05 - 1994
ஞாயிறு இரவு
★ 8-01 — சிறப்பு நிகழ்ச்சி 1958ஆம் ஆண்டு இனக் கலவரம்
★ 8-10 — தாயகப் பாடல்கள்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — தொடர் நாடகம் "இலங்கை மண்" 25ஆம் அங்கம்

23 - 05 - 1994
திங்கள் காலை
★ 7-02 — மாவீரவணக்கம்
★ 7-15 — மணியாரம்
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — தாயகப் பாடல்கள்.

## விமானக்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காரிகள் குழு ஒன்று ஆர்வம் காட்டி வருகிறது. டெண்டர் முறையைப் பயன்படுத்தி இக் கொள்வனவை நிறைவேற்ற அவர்கள் முயல்கின்றனர்.

90 ஆசனங்களைக்கொண்ட அவ-8 ரகத்தைச் சேர்ந்த இரண்டு விமானங்கள் 48 ஆசனங்களைக் கொண்ட ஏ. எச்; எஸ் - 478 ரகத்தைச் சேர்ந்தது விமானங்கள், 17 ஆசனங்களைக் கொண்ட அவ்ரோ ரகத்தைச் சேர்ந்த 9 விமானங்கள் மூன்று ஹெலிக்கொப்டர்கள் ஏற்கனவே கொள்வனவு செய்யப்பட்டுள்ள நிலையில், சி - 130 ரக விமானங்களைக் கொள்வனவு செய்வதற்கு அவசியமே இல்லை.

வடக்கு - கிழக்கு போரில் ஈடுபட்டுள்ள படையினருக்கு அடிப்படைத் தேவைகள் பல இல்லாத நிலையில் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகள் இப் போக்குவரத்து விமானங்களை கொள்வனவு செய்வதற்கு ஏன் இவ்வளவு ஆர்வம் காட்டுகின்றனர் என்பது தெரியவில்லை.

படை அதிகாரிகள் சிலர் தங்கள் பணப் பைகளை நிரப்புவதற்கு இடமளிப்பதன் மூலம் நாட்டை அழிக்க இடம் கொடுக்க வேண்டாம்.

—இவ்வாறு கடிதத்தில் திருமதி பண்டாரநாயக்கா கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார் என்று வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

(இ-எ-6)

## தென் யேமன்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அல்பயிற் தனிநாட்டுப் பிரகடனத்தை வெளியிட்டார்.

யேமன் ஜனாதிபதி அலி அப்துல்லா சலீ இப்பிரகடனத்தை நிராகரித்துவிட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

வட யேமனைச் சேர்ந்த ஜனாதிபதி அலி அப்துல்லா சலீ மூன்று நாள் யுத்த நிறுத்தம் ஒன்றை நேற்று அறிவித்ததைத் தொடர்ந்து, தென் யேமனின் தனிநாட்டுப் பிரகடனம் வெளியானது.

(இ-எ)


## பொமனேரியன் காணவில்லை

ஒரு வயது நிரம்பிய வெள்ளை நிற பொமனேரியன் நாயை விக்டோறியா றோட் சந்தியில் வைத்து 20 - 05 - 94 (வெள்ளிக்கிழமை) இரவு 8 00 - 8.30 மணிக்கு மிடையில் இரு இளைஞர்கள் விக்டோறியா வீதியால் பிடித்துச் சென்றதைக் கண்டதாக நம்பிக்கைக்குரியவர்கள் தெரிவிக்கிறார்கள். குழந்தைகள் வளர்த்த நாய்க்குட்டியாதலால் தயவு செய்து கொண்டு வந்து தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

க. நித்தியானந்தன், கிராமசேவையாளர், 50/3, ஐங்கரன் விளையாட்டு ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(31025)



## G. C. C. வைத்திய நிபுணர் ஆலோசனை நிலையம்

5/4/14, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்,
(கண்) மூக்கு, தொண்டை, காது (ENT) முறிவு, மகப்பேறு, சத்திரசிகிச்சை சிறுவர்களுக்குரிய வைத்தியம், சருமநோய்கள், என்பவற்றுக்கு விசேட வைத்தியநிபுணர்களால் ஆலோசனை வழங்கப்பட்டு வருகின்றன.

(யாழ். அரசாங்க வைத்தியசாலை
பழைய O. P. D முன்பாக)

(30847) நிர்வாகி



**தமிழீழ வைப்பகம்**
**தமிழரின் காப்பகம்**

**23-05-1994 முதல்**
பணியை
தொடங்குகின்றது

தமிழரின் முதலீட்டினால் தமிழீழத்தில் உருவாகும்
ஒரே வைப்பகம்
**தமிழீழ வைப்பகம்**
அதுவே தமிழீழ மக்களின் சிறப்பான காப்பகம்

✱ உங்கள் பணிக்கென உருவான வைப்பகம்
✱ தேவையின்போது தோள்தரும் தோழனாக
✱ கைதந்து உதவவரும் மெய்யான பணியாளனாக

## 'தமிழீழ வைப்பகம்'

✱ நடைமுறைக் கணக்கு ✱ தேட்டக் (சேமிப்பு) கணக்கு
✱ நிலையான வைப்புக் கணக்கு ✱ மேம்பாட்டுக் கடன்
✱ அடகுக்கடன் ✱ வாணிபக் கடன்

இத்தனை திட்டங்களும் உங்களுக்காகவே

∵ வைப்புக்கு உயர் வட்டி வழங்கி
∵ வளர்ச்சிப் பணிகருதி எளிய கடன்வழங்கி
மக்களின் தோழனாய் மலர்கின்ற வைப்பகம்

## "தமிழீழ வைப்பகம்"

மேலும் விளக்கங்கள்பெற எமது பணியகத்தை நாடுங்கள்

தமிழீழ வைப்பகம்

கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம். [சி/8305]



ஏழாலை தெற்கு - வசந்தபுரம்
## வசந்த நாகபூஷணி அம்பாள் தேவஸ்தான வருடாந்த வைகாசி விசாகப் பொங்கல்

எதிர்வரும் 24-05-94 காலை 5. 00 மணியிலிருந்து பொங்கல் ஆரம்பமாகி 10. 00 மணிக்கு விசேட பூஜை, கற்பூரச் சட்டி, பால் செம்பு, காவடி, பறவைக்காவடி, ஆண்கள், பெண்கள் அங்கப்பிரதிஷ்டை, விசேட மேளக் கச்சேரியும்

சொற்பொழிவு:-
த. சிவகுமாரன்
(கம்பன் கழக அமைப்பாளர் காரைநகர்)

ஆகிய நிகழ்ச்சிகள் இடம்பெற்று சுவாமி வீதி உலா வருதலும் இடம்பெறும்.

குறிப்பு:-
பகல் அன்னதானமும் (மகேஸ்வர பூஜையும்) இடம்பெறும்.

பொங்கல் உபயகாரர்:-
செ. ஏரம்பநாதன்
பொ. கந்தசாமி
த, சண்முகம்
க. தவராசா

தேவஸ்தானத்தினரும் - உபயகாரரும்
(7205)



## கண்ணீர் அஞ்சலிகள்

அன்பாலும் பண்பாலும் அனைவரதும் உள்ளத்தைக் கவர்ந்து தன்னுடைய அதிநுட்பமான ஒலியமைப்புச் சேவையால் முத்தமிழ்த்துறை சார்ந்த நிகழ்ச்சிகளையும் சிறப்பித்து வந்த
'நித்தி சவுண் சேவிஸ்'
உரிமையாளர்
**அமரர் நித்தியானந்தன்** (நித்தி அண்ணா)
அவர்களுக்கு எமது அகில இலங்கைக் கம்பன் கழகம் கண்ணீரஞ்சலியைக் காணிக்கையாக்குகிறது.
அவரின் ஆத்மாசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு, குடும்பத்தினர்க்கு எமது அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தி. திருநந்தகுமார் — தலைவர்
க. குமாரதாசன் — செயலாளர்
(சி/8308)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்திரிகாவின் உத்தரவை அடுத்து

# தீர்வுக்கு புதிய திட்டம் சு.க. தயாரிக்கின்றது!

### பேராசிரியர் பீரிஸ் தலைமையில் சட்டவல்லுநர் குழு

கொழும்பு, மே. 22

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு யோசனைத் திட்டம் ஒன்றைத் தயாரிப்பதில் சுதந்திரக் கட்சியின் சட்ட வல்லுநர் குழு ஒன்று ஈடுபட்டுள்ளது.

சுதந்திரக் கட்சித் தலைவிகளில் ஒருவரும் மேல்மாகாண முதலமைச்சருமான திருமதி சந்திரிகா குமாரணதுங்காவின் உத்தரவின் மீது இது இடம் பெறுவதாக சிங்கள வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

மிக விரைவில் இத் தீர்வுத் திட்டத்தைத் தம்மிடம் சமர்ப்பிக்கும் படியும் திருமதி குமாரணதுங்கா உத்தரவிட்டிருக்கிறார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இச் சட்டவல்லுநர் குழுவுக்கு கொழும்பு பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தலைவராக இருக்கிறார்.

இந்த உத்தேச யோசனைத் திட்டத்தின் அடிப்படையில் அனைத்துத் தமிழ்க் கட்சிகளுடனும் பேச்சுக்கள் நடத்தி அதன் மூலம் உருவாக்கப்படும் தீர்வுயோசனை ஒன்றைப் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் சேர்த்துக் கொள்ளவும் திருமதி சந்திரிகா திட்டமிட்டிருப்பதாகவும் அப் பத்திரிகைச் செய்தியில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் சேர்த்துக் கொள்ளப்படும் இனப் பிரச்சினைத் தீர்வு யோசனையை அமுல் நடத்துவதற்கு பொதுமக்களின் ஆதரவு கிடைப்பதில் தடை இருக்காது என்றும் அவர் கருதுகிறார். தீர்வுத் திட்டத்தை நிறைவேற்றுவதில் தாம் பின் நிற்கப்போவதில்லை என்று அவர் தெரிவித்திருப்பதாகவும் சிங்களப் பத்திரிகைச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ-எ-9)

### ஜாக்குலின் புற்றுநோயால் மரணம்

வாஷிங்டன், மே 21

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோன் கென்னடியின் மனைவி ஜாக்குலின் கென்னடி காலமானார் என்று அறிவிக்கப்படுகிறது.

புற்றுநோயினால் அவஸ்தைப்பட்டுவந்த அவருக்கு நேற்று முன்தினம் மரணம் சம்பவித்தது அவருக்கு வயது 64

ஜோன் கென்னடி ஜனாதிபதி பதவியில் இருந்தபோது 1963 இல் சுட்டுக்கொல்லப் பட்டார். அதன் பின்னர் ஜாக்குலின் கிரேக்க செல்வந்தர் அரிஸ்டோட்டல் ஒனாசிஸை திருமணம் செய்தார். (இ-எ)


## இரு மாதங்களுக்கொருமுறை 10 பெறுமதிமிக்க பரிசில்கள்

உங்களுக்கு காத்திருக்கின்றன

1ஆம் பரிசு = சுவர் மணிக்கூடு
2ஆம் பரிசு = எவர்சில்வர் பொருள்கள்
3ஆம் பரிசு = T சேட்

மற்றும் ரூபா 200/- மேற்படாத 7 ஆறுதல் பரிசில்களாக:

1. குடை
2. தொப்பி / சாப்பாட்டுப் பெட்டி
3. அல்பம் (ALBUM)
4. பாடசாலைப் பை
5. பிளாஸ்டிக் வாளி
6. எவர் சில்வர் பேணிகள்
7. கை மணிக்கூடு

இவற்றை வென்றிட நீங்கள் செய்ய வேண்டியது இதுவே

உங்களுக்கு அருகில் உள்ள எமது போத்தல் சேகரிப்பு நிலையத்தில் பின்வரும் போத்தல்களில் யாதேனும் இரண்டைக் (2) கொடுத்து அதற்குரிய பணம் ரூபா 10/- பெறுவதுடன் ஒரு பரிசுச் சீட்டையும் இலவசமாக பெற்றுக் கொள்ளுங்கள் போட்டிக்கு ஏற்கப்படும் போத்தல்கள்;

★ ஜாம் (JAM)
★ கோடியல் (CORDIAL) (வெள்ளை/சிறப்பு)
★ வீவா, ஹார்லிக்ஸ் (450g) பிளாஸ்டிக் மூடியுடன்
★ பியர் (BEER)

● இன்றே உங்கள் போத்தல்களை எம்மிடம் விற்று உங்கள் அதிர்ஷ்டத்தை பரீட்சித்துப் பாருங்கள்
● முதலாவது சீட்டிழுப்பு யூலை 15ஆம் திகதி 1994 வெள்ளிக்கிழமை நடைபெறும்.
● பரிசு பெறுவோரின் விபரங்கள் பத்திரிகை வாயிலாகவும், தபால் மூலமும் அறிவிக்கப்படும்.

பின்வரும் இடங்களில் போத்தல்களை ஒப்படைக்கலாம்

1. ரேஸ்ட்லைன் இன்டஸ்ரீஸ் (தனி) லிமிட்டட் 14, சீனியர் லேன், யாழ்ப்பாணம்.
2. ஸ்கந்தா மஸ்ரர், வட்டுக்கோட்டை.
3. கந்தசாமி அன் சன்ஸ், சங்கானை.
4. லிங்கம் கூல் பார், மானிப்பாய்.
5. சபாரிஸ், சுண்டுக்குளி.
6. பேப்பர் சொப், இருபாலை
7. சுபாஸ் பேக் கவுஸ், நெல்லியடி.
8. பீடா சொப், உடுப்பிட்டி.
9. செல்வராஜா ஸ்ரோஸ், பருத்தித்துறை.
10. மாருதி, வல்வெட்டித்துறை.
11. அறிவகம், சாவகச்சேரி.
12. வாசுகி ஸ்ரோஸ், சுண்டிக்குளி.
13. நியூ வசந்தா, சின்னக்கடை.
14. லங்காபதி மல்லாகம்.
15. தாஸ் ஸ்ரோஸ், திருநெல்வேலி.
16. விநாயகர் ஸ்ரோஸ், கல்வியங்காடு.
17. ஜெயசக்தி பார்மஸி, மருதனார்மடம்.
18. யாழ்றன் ஸ்ரோஸ், கொக்குவில்.
19. சோதிட புத்தக நிலையம், இணுவில்.
20. கபில் உணவகம், பளை
21. எஸ். ஆர். மகேந்திரன் ஸ்ரோஸ், கொண்டாவில்.
22. அம்பிகை வர்த்தக நிலையம், திருநெல்வேலி.
23. சித்திவிநாயகர் நூல் நிலையம், ஏழாலை.
24. பேரம்பலம் அன் சன்ஸ் சுன்னாகம்.
25. அன்புக் களஞ்சியம், ஆஸ்பத்திரி வீதி.
26. டன் ஸ்ரோஸ், உடுவில்.
27. வேல் களஞ்சியம், தட்டாதெரு.
28. செல்வச்சந்நிதி ஸ்ரோஸ், வல்வெட்டித்துறை.
29. கிருஷ்ணா வர்த்தக நிலையம், திருநெல்வேலி.
30. கேதீஸ்வரன் உடுவில்.

ரேஸ்ட் லைன் இன்டஸ்ரீஸ் [தனி] லிமிட்டட்
14, சீனியர் லேன், யாழ்ப்பாணம்,

[சி-8217]



வெளிவந்துள்ளது! சொற்ப பிரதிகளே!

**105 MODEL ESSAYS**
[Second Edition]

105 ஆங்கில கட்டுரை நூல்
(பல தரப்பட்ட, தரமான கட்டுரை நூல்)

ஆக்கியோன்:
த. ந. பஞ்சாட்சரம்

★ உதவி ஆங்கில ஆசிரியர் தெரிவுப் பரீட்சை - 1994
★ N. C. E. பரீட்சை
★ தொழில் நுட்பக் கல்லூரி
★ பல்கலைக்கழக மாணவர்கள்
★ மாற்றும் ஆங்கில மொழியில் ஆற்றலை வளம் படுத்த விரும்பும் அனைவர்க்கும் பிரயோசனமான நூல்.

விலை ரூபா 125/-

கிடைக்குமிடம்;

**NEW SCIENCE HALL**
KANNATHIDDY, JAFFNA.

பூபாலசிங்கம் புத்தகசாலை
யாழ்ப்பாணம்.

[சி-8230]


உ

சித்தன்கேணி

## மகா கணபதிப்பிள்ளையார் கோயில் தேர்த் திருவிழா

காலம்: 23 - 05 - 1994 திங்கட்கிழமை காலை 9 மணி

தேர்த் திருவிழாவின் போது மேற்படி கோயிலில் நீண்டகாலமாகச் சேவை புரிந்து வரும்

இசை மேதை என். ஆர். கோவிந்தசாமியின் புத்திரர்களான



திரு. என். ஆர். கே. ரத்னகுமார்,
திரு என். ஆர். கே. வாகீஸ்வரன்

ஆகியோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவர்
பேராசிரியர் அ. சண்முகதாஸ்
அவர்களால் பொன்னாடை போர்த்தித் தங்கப் பதக்கம் அளித்துக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

- திருவிழா உபயகாரர்.

[சி-8199]

## நினைவஞ்சலி

8ஆம் ஆண்டு — 10ஆம் ஆண்டு



திருமதி
விசுவலிங்கம் கண்மணி
(இணுவில் - நயினாதீவு)
மண்ணில்: 04 - 09 - 1924
விண்ணில்: 21 - 05 - 1986
திதி: 22 - 05 - 1994



அமரர்
விசுவலிங்கம் ஜெயபாலன்
(இணுவில்)
மண்ணில்: 08 - 01 - 1953
விண்ணில்: 19 - 09 - 1984

ஆண்டுகள் பல சென்றாலும்
உங்கள் இருவரினதும் புனித நினைவுகளுடன் வாழ்கின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நெஞ்சம் மறவாத நினைவுகளுடன்:
- குடும்பத்தினர்.

காந்த வாசம்,
இணுவில் மேற்கு, இணுவில்.

[31031]

உ

அத்தியடி

அருள்மிகு ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்தி பிள்ளையார் கோயில்

## "சங்கர நாராயணன்"

நூதன விக்கிரகப் பிரதிஷ்டை 23-05-94 திங்கட்கிழமை காலை 8-00 மணிக்கும் 10.00மணிக்கும் இடையே வரும் சுபவேளையில் நடைபெறும். மாலை 5.00 மணிக்கு உற்சவம்.

இம்மூர்த்தி பற்றிய சில குறிப்புக்கள்;

★ இது ஒரு அபூர்வ மூர்த்தம். ஆகமங்களில் கூறப்பட்டுள்ள அறுபத்து மூன்று மூர்த்தங்களில் கேசவார்த்தம் என்று அழைக்கப்படுகிறது.

★ சிவனும், விஷ்ணுவும் ஓர் உருவாய் இணைந்திருக்கும் இம்மூர்த்தியை, பேயாழ்வார் பொய்கை ஆழ்வார் மங்களாசாசனம் செய்துள்ளனர். ஞானசம்பந்த சுவாமிகளும், அப்பர் சுவாமிகளும் தேவாரப் பதிகத்தில் சுட்டியிருக்கிறார்கள்.

★ இங்கு அமைந்துள்ள இத்திருக்கோல வடிவில் வலப்புறமாகப் பாதி மதி, நதி உலாவும் சடாம குடம், அரவக்குழைபணி செவி, அரவூரும் திருமார்பு, வேல் ஏந்திய அபயகரம், மழுவேந்திய ஒரு கரம், புலித்தோலாடை, தண்டையணி காலுடன் சிவசாந்நித்தியம் துலங்குகிறது. இடப்புறமாக, இரத்தினக் கிரீடம், மணி மகரகுண்டலக்காது, கௌஸ்துப மணி மாலை மார்பு, சங்கேந்திய ஒரு கரம், கதையுடன் மறுகரம், பீதாம்பர ஆடை ஆகியவற்றுடன் விஷ்ணு சாந்நித்தியம் திகழ்கிறது.

★ செந்திவண்ணனும், ஆழிமழைக் கண்ணனும் பின்னிப் பிணைந்திருக்கும் இப்பேரழகு வடிவத்தை கலையழகு பொலிய வார்த்துக் கொடுத்தவர் சிற்பி பாஸ்கரன் அவர்கள்.

★ நல்லை ஆறுமாமுகவனின் அடிபணிந்தேற்றும் குரு சங்கர நாராயணன் அடியார் ஒருவரின் அயரா முயற்சியாலும், சில அடியார்கள், எமது கோயில் ஆகியோரது ஆதரவில் இது உருவாகியுள்ளது.

★ சகுருவான ஆலமுண்டோனும், ஞாலமுண்டமாலும் ஒருருவாய்ச் சேவை சாதிக்கும். இத்தொன்மை மூர்த்தியின் பிரதிஷ்டாபிஷேகத்தில் அடியார்கள், அறிஞர்கள், அருங்கலை வல்லுநர்கள், கல்விமான்கள், கலாரசிகர்கள் கலந்து இவ்வற்புத, அதிசய, அனந்த மூர்த்தியைக் கண்ணாரக்கண்டும், கருத்திலே நிறுத்தியும் நீள நினைந்து தியானிக்கும் பெருவாய்ப்பும் பேறும் பெறுவதற்காக, அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

— ஆலய நிர்வாக சபை.

(30969)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

### அமரர் தில்லையம்பலம் கனகசபை
(ஓய்வு பெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்)


இன்று ஞாயிற்றுக்கிழமை 22-05-1994 எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்ச்சிகளிலும், மதிய போசனத்திலும், கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்:
மகன: தி. தனேஸ்வரன்:

காலையடி, பனிப்புலம்,
பண்டத்தரிப்பு.

[7204]

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
### இராஜசிங்கம் இராஜமனோகரன்
(பிறப்பு, இறப்பு விவாகப் பதிவாளர்)

தோற்றம்: 07 - 07 - 1934
மறைவு: 25 - 05 - 1991

திதி: 22 - 05 - 1994

வீட்டின் ஒளி விளக்காய் இருந்து திடீரென எங்களை விட்டு பிரிந்த அப்பாவின் ஆத்மா சாந்தியடைய காசி விநாயகரை பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமகன், பேரப்பிள்ளைகள்.

"இராஜகிரி"
தெல்லிப்பழை.

[7203]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பெயின்ற் வியாபாரிகளின் கவனத்திற்கு எங்களிடம் 100 மி.லீ., 50 மி.லீ. வெற்று டின்கள் உண்டு; தேவையானோர் தொடர்புகொள்ளவும். றோயல் இன்டஸ்றீஸ், பொன்னையா ஒழுங்கை, ஆனைக்கோட்டை. (சி-8192)

காலை மாலை 4 போத்தல் பால் எடுக்கும் யமுனாபாரி ஆடும் கிடாய்க்குட்டியும் Original சணல் யமுனாபாரி ஆடும், குட்டி போடும் தறுவாயில் விற்பனைக்குண்டு. ஆ. கனகசிங்கம், 214, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (30989)

நல்லின அழகிய கோழிகளின் அடை முட்டைகள் விற்பனைக்குண்டு. ஹம்பேர்கன், பிராமா, சில்கி, போலிஸ், சில்வர், பினரட், பாபடின், பன்டம், பிறீசில், பாமாஸ், வெள்ளடியன் வார் கோழிகள் முட்டைகள். "சஸ்வரி இல்லம்", மேஜர் செல்லராஜா வீதி (மடத்தடி ஒழுங்கை), கோண்டாவில் மேற்கு. (30972)

தும்புத்தடி, தடி விளக்குமாறு முதலியவை தயாரிக்க உகந்த வெற்றுத் தரங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: றோயல் இன்டஸ்றீஸ், பொன்னையா ஒழுங்கை, ஆனைக்கோட்டை. (சி-8191)

லவ் பேட்ஸ் கூட்டுடன் அல்லது சோடியாக விற்பனைக்குண்டு. 25, கைலாசப்பிள்ளையார் கோயில் பின் வீதி, நல்லூர். (31002)

ஸ்ரான்லி வீதியில் ரயில்வே கடவைக்கருகில் மூன்று கடைகளுடன் கூடிய மேல்மாடிக் கட்டடம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: V. S. கனகரத்தினம், வீரபத்திரர் ஒழுங்கை, கல்வியங்காடு. (31017)

நெசனல் றேடியோ கசட் 5055 நெசனல் டெக் N. V 2000 (பழுதடைந்த நிலையில்) வாகனத்துக்கு பூட்டும் கசட், சொனி பொக்கட் கசட் (சிறியது), சிங்கர் தையல் மெஷின் தொடர்பு கொள்க: இல. 117, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். (31018)

அடை வைப்பதற்கு உகந்த பகிரம், பாபதிக்கல், கைசெக்ஸ், பிறவுண், லெகினடி, ஸ்பான்கிலர், நல்வினத் தாரா முட்டைகளும், நல்லின கோழி, தாராக்குஞ்சுகளும், முட்டையிடும் பேடுகளும், கினிக்கோழிகளும் விற்பனைக்குண்டு தொடர்பு: கதிர் தேனீர்ச்சாலை, துறைமுகச்சந்தி, கொழும்புத்துறை. (30995)

நல்ல நிலையிலுள்ள ஒக்ஸ் போட் காருக்கு பொடக்கூடிய நான்கு 5-90-14 வெள்ளைக்கோடு ரயரும், ரியூப்பும், கேம்பிறிச் காருக்குரிய நான்கு 5-60-15 கனனி ரயரும், ரியூப்பும் விற்பனைக்குண்டு. தொடர்பு: பெரிய தம்பி சைக்கிள் வேக்ஸ், V. C. அருணாசலமயில் சங்கரத்தைச் சந்தி, வட்டுக்கோட்டை. (31010)

மாநகரசபை எல்லைக்குள் உள்ள நல்ல வீடுகள் தளபாடங்களுடன் உடன் விற்பனைக்குண்டு. மங்கள ஏஜென்சி கொய்யாத்தோட்டம் (31021)

### கார் விற்பனைக்கு

மிகவும் நல்ல ஓடும் நிலையில் உள்ள ஆடம்பர போர்ட் கப்றிஸ் நவீன கார் பற்றறியுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 48/1. முதலாம் ஒழுங்கை, (ஐங்கரன் விளையாட்டுக்கழக ஒழுங்கை) பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (30992)

### பயிற்சி வினாத்தாள்கள்

A/L, O/L ஆண்டு 5 புலமைப்பரிசில் 8, 4, 5, 6, 7, 8, 9, 10 வகுப்புகளுக்கான ஒவ்வொரு மாதமும் எம்மால் வெளியிடப்படுகின்ற பயிற்சி வினாத்தாள்கள் விடைகளுடன் பெற்றுக்கொள்ளலாம். பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள், புத்தகசாலைகள், ஆசிரியர்களுக்கு விசேட கழிவுண்டு. Bond, யாழ்ப்பாணம். (7365)

### வினாத்தாளும் நிதியும்

(Past paper with Answer) 1993, 92 91, 90, (6 Exams) 1992 & 1991 Special விலை 115/- ஆக்கம்: E. செல்வநாயகம். விற்பனையாகிறது. பூபாலசிங்கம் பொத்தக நிலையம், யாழ்ப்பாணம். (சி-8211)

### கோழிக்குஞ்சு விற்பனை

சிவப்பு, சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. "மல்லிகா பதி", மானிப்பாய். (30977)

### தேவை

நல்ல நிலையில் உள்ள TVS மோபேட் மோட்டார் சைக்கிள் தேவை. தொடர்பு: எஸ். பீ. சிவஞானம், சட்டத்தரணி, இலங்கை வங்கி ஒழுங்கை, கன்னாகம் தெற்கு, சுன்னாகம். (7201)

எமது ஸ்தாபனத்திற்கு உடன் சிரட்டைகள் தேவை. ஆர். வி. ஜி. பீடி ஸ்தாபனம், 58, குறுக்குத்தெரு, நல்லூர். (30951)

### மணமகள் தேவை

பிரான்சில் வதிவிட விசா பெற்ற தொழில்பார்க்கும் பண்புள்ள இந்து C. T. B. மெக்கானிக் வயது 31, அத்தம், 2இல் செவ்வாய் வாலிபருக்கு நற்பண்புள்ள மணமகள் தேவை. குறிப்பு விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். இரகசியம் பேணப்படும். இல. 643, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (30966)

ரேவதி 8 பாவம், 30 வயது, பொருளாதாரமும் தொழிற் கல்வியுடன் யாழ். கம்பனி ஒன்றில் வேலை செய்பவருக்கு 30 வயதுக்குட்பட்ட பெண் தேவை. தொடர்பு: த. இராமநாதன், பென்சனியர், புஸ்பநாதன் வீதி, இணுவில் மேற்கு, இணுவில். (7100)

### மணமகன் தேவை

இந்து சமய 42 வயது, மகம் 1ஆம் பாதம், சுருக்கெழுத்து, தட்டெழுத்து படித்த மணமகளுக்கு அரசாங்க உத்தியோகம் அல்லது சொந்த வியாபாரம் செய்யும் மணமகன் தேவை. இல. 938, உதயன் மே/பா (7397)

இந்து கௌரவமான குடும்பம், அவிட்டம், பாதம் 2, வயது 45க்கு மேற்படாத பட்டதாரி மணமகளை தமது 35 வயது, மாதம் பத்தாயிரம் சம்பளம் பெறும் பெண்ணுக்கு பெற்றோர் தேடுகிறார்கள். ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். 644, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [30967]

இந்து, கௌரவமான குடும்பம், வயது 40, மணமாகாத பெண்ணுக்கு 41 48 வயதுள்ள திருவோணம், ரேவதி, அத்தம், சுவாதி அல்லது புனர்பூசம் நட்சத்திர மணமகனை பெற்றோர் தேடுகிறார்கள். ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். இல. 645, மே/பா, உதயன், யாழ்ப்பாணம். (30968)

இந்து, 37 வயது, இரண்டிற் செவ்வாய், கேட்டை நட்சத்திரப் பெண்ணுக்கு ஆசிரியர், வங்கி, கணக்காளர், லிகிதர், தனியார் நிறுவனங்களில் வேலை செய்யும் மணமகன் தேவை. குறிப்புடன் தொடர்பு: திருமணச் சேவை, 75, யாழ் வீதி, சாவகச்சேரி. (7403)

### மணமக்கள் தேவை

செவ்வாய்க்குற்றமற்ற தாரமிழந்த அரசாங்க உத்தியோகத்தருக்கும், 31, 33 வயது டாக்டருக்கும், 33, 34 வயது பட்டதாரி ஆசிரியருக்கும், 27 வயது ஆயுர்வேத டாக்டர் பெண்ணுக்கும் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம். (31020)

### சர்நாடக சங்கீதம்

கைவேடு I ரூபா 10/- கைநூல் ரூபா 15/- 72 மேளகர்த்தா விளக்கம் ரூபா 5/-. மேற்படி பிரதிகள் எல்லாப் புத்தகசாலைகளிலும் விற்பனையாகின்றன. (7395)

### ஆங்கிலக் கல்வி

தனிப்பட்ட முறையில் 9ஆம், 10ஆம், 11ஆம், 12ஆம் ஆண்டு வகுப்புகளுக்கான ஆங்கிலம், ஆங்கில இலக்கிய வகுப்புக்கள் 25 05-94 புதன் கிழமை ஆரம்பமாகின்றன. தொடர்பு: சி. முத்துக்குமாரன், பிள்ளையார் கோயிலடி, இணுவில் தெற்கு (30988)

### சிறார்களே

நீங்கள் விரும்பித் தெரிவு செய்யும் பொது அறிவுக் கதைப் புத்தகங்களுக்கும் பாடசாலைப் புத்தகங்கள், உபகரணங்களுக்கும் வாருங்கள். ஆனந்தன் புத்தக நிலையம், 21/8, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (7399)

### மணப்பெண்கள் தேவை

கௌரவமான பெற்றோர் வயது 29, அச்சுவினி, Norway, Business Management தொழில் புரிபவர், வயது 29, ரோகிணி, 8 செவ்வாய், M. Sc. Mechanical Engineer படித்த/ பட்டதாரி அழகிய பெண்களை தேடுகிறார்கள். தொடர்பு கொள்ளவும்: M. Rajenthirem Retd - Accountant Kopay South [Near Navalar School] Kopay. (30971)

### தவறிவிட்டது

18-5-94 இரவு கந்தர்மடத்திலிருந்து பால்க்சால் வீதிக்குப் போகும் வழியில் ஆண்களுக்கான மணி பேர்ஸ் (கறுப்பு நிறம்) ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஆனந்த புத்தக நிலையம், 21/B, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். (30976)

16-05-94 அன்று மானிப்பாய்ச் சந்தைக்கும் சுதுமலை மதவடிக்கும் இடையில் திருமதி கணபதிப்பிள்ளை சிவலோகநாயகி என்பவரின் தேசிய அடையாள அட்டை தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து பின்வரும் விலாசத்திற்கு ஒப்படைக்கவும். திருமதிச. கணபதிப்பிள்ளை, மதவடி ஒழுங்கை, சுதுமலை தெற்கு, மானிப்பாய். (7202)

### திருமண சேவை

உள்நாடு, வெளிநாடு, ஆண், பெண் ஜாதகம் உள்ளவர்கள் உடனடியாக எம்மிடம் தொடர்புகொள்க: அபிராமி, துர்க்காதேவி தேவஸ்தான வீதி, சாவகச்சேரி. (30986)

### ராகு கேது மாற்றம்

மே 19 ராகு, கேது மாற்றம் ரூபா 10-. விற்பனையாகின்றது: 24 மணித்தியால மருந்தக சேவை செய்யும் நிறுவனம், பகவான் மருந்தகம், 221, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (30946)

### மிருதங்கம்

தோல் வாத்தியங்கள் யாவும் ஒரு கிழமைக்குள் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும். கோவிந்த பிள்ளை விஜயகுமார், 192/1, நாவலர் றோட், பெருமாள் கோயிலடி, யாழ்ப்பாணம். (30858)

### உடன் தேவை

பாண் தயாரிப்பில் விசேட தேர்ச்சி பெற்ற ஒருவர் தேவை. பாஸ் — முன்பு வேலை செய்த வெதுப்பகத்தில் இருந்து கடிதம் பெற்று வரவும். சம்பளம் வேலைத் திறமையைப் பொறுத்து கொடுக்கப்படும். தொடர்பு கொள்ள வேண்டிய விலாசம்: ரோசி வெதுப்பகம், பொற் பதிவீதி கொக்குவில் கிழக்கு. (30996)

### கல்வி

(O/L)ல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தினை ஆரம்ப அறிவிலிருந்து Distinction பெறுபேறடைய 40 மணித்தியாலங்களில் கற்பிக்கப்படும். மற்றும் பாலர் வகுப்பில் இருந்து A/L வரை சகல பாடங்களும் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டிக்குளி. (7388)

## பாடசாலைகளில் முதலாம் ஆண்டு மாணவர் அனுமதி

கொழும்பு, மே 22

பாடசாலைகளில் முதலாம் ஆண்டு வகுப்புகளில் பிள்ளைகளை அனுமதிப்பதற்கு விண்ணப்பிக்கும் கடைசித் திகதி எதிர்வரும் ஜூன் மாதம் 30ஆம் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பிப்பது பற்றிய விவரங்களை ஜூன் மாதம் முதல் வாரத்தில் கல்வி அமைச்சு வெளியிடவுள்ளது. (இ-எ-6)

## காணி அதிகாரிகளாக நியமனம்

கொழும்பு, மே 22

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் பணிபுரியும் குடியேற்ற அதிகாரிகள் அனைவரும் காணி அதிகாரிகளாக நியமிக்கப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான அரச வர்த்தமானி ... வெளியாக இருப்பதாக தெரிய ...

---

நீர்வேலி
கந்தசாமி கோயில் அறிவித்தல்

## பொதுச் சபை உறுப்பினர் விண்ணப்பம் கோரல்

மேற்படி நீர்வேலி கந்தசாமி கோயிலின் பொதுச் சபை உறுப்பினராக இணைந்து கொள்ள விரும்புபவர்கள் ஆண்டுச் சந்தா ரூபா 120/- ஐ கூடியகெதியில் பொருளாளரிடம் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். மேலதிக விவரங்களை செயலாளரிடம் இருந்து அறிந்து கொள்ளலாம்.

சி. தயாநாதன்,
செயலாளர்,
பரிபாலன சபை.

09 - 05 - 1994 [31023]

---

## கண்ணீர் அஞ்சலிகள்

காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி அதிபர்
திரு. நல்லதம்பி பரமசிவம்
அவர்களின் தாயார்

### திருமதி நல்லதம்பி பொன்னம்மா

அவர்களின் மறைவையொட்டி எமது கண்ணீர் அஞ்சலிகள்!

க. பொ. த. (உயர்தர)-
மாணவர் மன்றம்.

காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி,
வட்டுக்கோட்டை. [31018]

---

## 13ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு 17 — 12 — 1936

மறைவு 10 — 05 — 1994

### திருமதி பாவநாசம் தையல்நாயகி

திருமதி பாவநாசம் தையல்நாயகி கொழும்பில் சிவபதம் அடைந்தார்.

அன்னாரின் வீட்டுக் கிரியை இன்று (22-05-1994) ஞாயிற்றுக் கிழமை இல. 20, யாழ் வீதி, யாழ்ப்பாணம் இல்லத்தில் நடைபெறும்.

பிரிவால் துயருறும்:
பிள்ளைகள்; மருமக்கள்;
பேரப்பிள்ளைகள்.

20, யாழ்வீதி,
யாழ்ப்பாணம். [31014]

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



### அமரர் முருகேசு தம்பிமுத்து

(ஓய்வு பெற்ற உதவி அரசாங்க அதிபர்)

தோற்றம்: 02 — 07 — 1923
மறைவு: 23 — 04 — 1994

ஆலமரமாய் எம் அனைவருக்கும் நிழல் தந்து, பாசத்துடன் எம்மை வளர்த்து, நேர்வழி காட்டிய அன்புத் தந்தையின் இனிய ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நாளை (23 - 05 - 1994) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

எமது அன்புத் தந்தையின் மறைவின் போது நேரில் வந்து அஞ்சலி செலுத்தியோர், அனுதாபச் செய்திகளை அனுப்பியோர், அஞ்சலி பிரசுரங்களை அச்சிட்டு வெளியிட்டோர், பல வழிகளிலும் உதவிகள் புரிந்தோர் அனைவருக்கும் எமது அன்பு கலந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

மனைவி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

[31015]

---

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 22 — 05 — 1937

உதிர்வு: 06 — 05 — 1990

### அமரர் நாகலிங்கம் சிவபாதசுந்தரம்

(Formerly Deputy Director, Dept. of Buildings)

திதி: 22 — 05 — 1994

அன்பு பொழிந்து, அன்பின் இருப்பிடமாய்,
உலகம் போற்றும், பண்பின் உறைவிடமாய்,
அமுதமொழி பேசி, பாசத்தின் ஒளிவிளக்காய்,
கடமையைக் குறிக்கோளாய் கொண்டு,
பதவியில் மேன்மையாய்,
இல்லறத்தையும் இனிதே நடத்தி மறைந்த
அன்பு தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய,
இன்றைய பிறந்த நாளில்
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் நினைவுடன் வாழும்:
மனைவி, பிள்ளைகள்,
உறவினர்கள்.

"ஜெயபதி",
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய். [7405]

---

O/L பரீட்சை பெறுபேறுகளால்
உயர்கல்வியைத் தொடரமுடியாத
உங்களுக்கான **அரிய சந்தர்ப்பம்**

## O/L DAY CLASS

(காலை 8 00 - பிற்பகல் 1. 00)

★ மேலும் சிறிதளவு மாணவர்க்கு மட்டுமே இடம் வழங்கப்படும்.
★ காலம் தாழ்த்தாமல் உங்கள் இடங்களை உறுதிப் படுத்துங்கள்.

**21 வருடங்களுக்கு மேலான இணையற்ற சேவையில் உயர்ந்த நிகரற்ற நிறுவனம்**

ESTD:- 1973 REGD: No J/7993


**The Express Institute**

IRUPALAI - KOPAY

[30997]

---

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு
நிறுவன,
யாழ். மாவட்ட வர்த்தகப் பகுதி
உதவிச் செயலர்



### அமரர் ஆ. குலசிங்கம்

அவர்களுக்கு எமது

## இதய அஞ்சலி

மேற்கு வானில் சூரியன் அஸ்தமிக்கும் நேரம்
நம் நிறுவனத்தில்
ஓர் ஆதவனின் முடிவில்லா அஸ்தமனம்
நாளை வானில்
ஆதவனின் உதயம் நிச்சயம் நடைபெறும்
ஆனால் எமக்கோ?
விஸ்தரிக்க வார்த்தைக்கு எங்கே போக
விழிநீரும் ஊற்றெடுக்க மறந்து விட்டதே,
எம் தந்தை! எம் வழிகாட்டி, எம் ஆசான்
எளிமை அன்பை அள்ளித்தரும்
அமைதியின் சின்னம்
நேற்றிருந்தார் இன்றில்லை. என் செய்ய?
நாம் அறிவோம் அவர் பெருமை -
ஆனால் காலன் அறிவானோ?
கடு தியிற் பறித்துவிட்டான் மூன்று ஆண்டுகட்கு
மேலாய முத்தான அவர் சேவை எத்திக்கும் புகழ்
பரப்பும் எம் பணியாளர் மறப்பிடுவர்
நாளை அவர் இடம்
இன்னொருவரால நிரப்பப்படலாம்
நம் இதயங்களில் அவர் இடம்...?
என்றுமே நிரம்பாத வெற்றிடம்தான்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

- பணியாளர்கள் வர்த்தகப் பகுதி.
த. பொ. மே. நி.

[31026]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
192/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## மன வணக்கம்

ஈழத்தில் இந்துக்களின் ஒப்புயர்வற்ற வழிபாட்டுத் தலங்களாக இருப்பவை பல.

அவற்றில் நாயன்மார்களினால் தேவாரப் பாடல்பெற்ற தலங்கள் இரண்டு

ஒன்று திருக்கேதீஸ்வரம், மற்றையது திருக்கோணேஸ்வரம்.

இதிலும் சம்பந்தர், சுந்தரர் ஆகிய இருவராலும் துதிக்கப் பெற்ற சிறப்பு மிக்க திருத்தலமாக விளங்குவது மன்னார் அருகே மாதோட்டத்தில் அமைந்துள்ள திருக்கேதீஸ்வரம்.

இந்த காலத்திலேயே அங்கு வருடாந்த உற்சவம் நடைபெறுவதுண்டு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை — நாளை மறுதினம் — அங்கு சித்திர சிறப்பு மிக்க பாலாவிக் கரையில் தீர்த்தோற்சவம் நடக்க வேண்டிய தினம்.

ஆனால் சிங்களப் படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டு குழப்பட்ட நிலையில் — உற்சவம் இன்றி — இருண்டு கிடக்கிறது ஈழத்துச் சைவர்களின் அருள் மிகுசிவாலயம்.

படையினரின் அனுசரணையுடன் தினசரி ஜீப்பில் கூட்டிச் செல்லப்படும் குருக்கள் ஒருவர் மட்டும் அங்கு பூசையை முடித்துத் திரும்புகிறார்.

இந்த நிலைமை அங்கு மட்டுமா?

தேவார பாடல் பெற்ற மற்றைய தலமான கோணேஸ்வரத்திலும் இதே அவலம் தான்.

கோணேசர் மலையின் உச்சியிலே கோணநாதர் எழுந்தருளியிருக்க — அந்த மலை அடிவாரத்திலே அந்நிய நாட்டு ஆக்கிரமிப்பாளர்கள் — போர்த்துக்கேயர் — கட்டிய கோட்டையிலே சிங்களப் படை குடிகொண்டிருக்கிறது — ஆலயத்துக்குப் பக்தர்கள் போய் வருவது அச்சத்துடனேயே.

சிங்களப்படையின் காவலோடு அந்தக் கோட்டைக்கு உள்ளே சிங்களப் பேரினவாதிகள் அண்மைக் காலத்தில் கட்டி எழுப்பிய "கோகர்ண விகாரை" அங்கு ஸ்தாபிக்கப்பட்ட புத்த பெருமானின் மிக உயரமான சிலை, திருகோணமலை நகரிலிருந்து கோணேஸ்வரத்தை நோக்கும் போது — கடல் பகுதிக்கு அப்பால் தரையில் இருந்து பார்க்கும் போது — கோணநாதர் கோயிலை மறைக்க முயன்று நிற்கிறது.

இவை ஈழத்தில் இந்து மக்களின் — தமிழர்களின் — சமயசுதந்திரத்துக்கு பௌத்த சிங்கள ஏகாதிபத்தியம் போட்டிருக்கும் விலங்கை வெளிக்காட்டும் உதாரணங்கள்.

தமிழர்களின் நூற்றுக்கணக்கான கோயில்கள், தேவாலயங்கள் சிங்களப் படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டு குறையாடப்பட்டுள்ளன. வழிபாடுகள், திருவிழாக்கள் இன்றி ஆலயங்கள் இருண்டு போய்க் கிடக்கின்றன. சிங்கள ஆக்கிரமிப்பிலிருந்து விடுவிக்கப்பட்ட தமிழர் பிரதேசங்களில் அமைந்துள்ள பல ஆலயங்கள் கூட ஸ்ரீலங்கா விமானப்படையின் கொடூரக் குண்டு வீச்சால் நாசமாக்கப்பட்டிருக்கின்றன.

இந்த இருண்ட ஆலயங்கள் — மக்களின் மதஅனுஷ்டானங்கள் — ஒளி பெறுவதற்கு வாய்ப்பில்லையா?

ஏன் இல்லை, உண்டு.

அதற்கு முதலில் ஈழத்தமிழரின் இருண்ட வாழ்வுக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட வேண்டும். அவர்களின் வாழ்வில் சுதந்திர ஒளி ஏற்பட வேண்டும்.

ஆகவே திருக்கேதீஸ்வர உற்சவகாலமான இக்காலத்தில் — நாம் அந்தப் புனித பிரதேசத்துக்குச் சென்று அங்கு மூலஸ்தானத்தில் சுயம்பு வடிவாக எழுந்தருளியுள்ள கௌரிநாதரை — தென்கயிலாயநாதரை — நேரில் தரிசிக்க முடியாவிட்டாலும் — மனதில் நினைத்து உயர்த்திடுவோம் அது வெறும் மதவணக்கமாக மட்டும் அல்லாமல் இனவிடுதலை வேண்டிய மனவணக்கமாகவும் இருக்கட்டும்.

நாம் வேண்டுகின்ற இனவிடுதலை கிடைக்கும் போது மத சுதந்திரமும் கிடைக்கும் அப்போது நாம் விரும்பிய ஆலயத்தில் நாம் வேண்டுகின்ற வேளையில் எமது மனம் எண்ணப்படி வழிபாடுகளையும் இயற்ற முடியும்.

# ஆளுங்கட்சிக் குழப்பம் ராணுவத்திலும் பிரதிபலிப்பு;
# காமினி-ரணில் போட்டி; விஜே.-ஜே.ஆர் மோதுவர்

"போன மச்சான் திரும்பி வந்தார் பூமணத்தோடே" என்பது நாற்பதுகளின் சினிமாப் பாடல் ஒன்றின் வரி. அந்தப் பாடலுக்குரிய கதாநாயகனைப்போல, ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகிச் சென்ற காமினி திசாநாயக்கா மீண்டும் அந்தக் கட்சியில் சேர்ந்து அதன் தேசியப் பட்டியலில் எம்.பியாகவும் வந்துவிட்டார்.

இந்த வாரத்தில் வெசாக் காலத்துடன் (வைகாசி விசாகத்துடன்) அதிர்ஷ்டம் அவரை அதிகமாக அழைக்கவுள்ளது. மிக முக்கியமான பதவி ஒன்றும் அவர் தலையில் சூட்டப்படவுள்ளது. அவர் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சராக நியமிக்கப்படுவார் என்பது ஒரு சிலரின் ஊகம். அப்படியில்லை அரசியல் விவகார அமைச்சராக காமினியை நியமித்து தமிழர் பிரச்சினையை — இனப்பிரச்சினையை — தீர்த்து வைக்கும் பொறுப்பை அவரிடமே ஜனாதிபதி ஒப்படைக்கப் போகிறார் என்பது மற்றும் சிலர் தெரிவிக்கும் ஹேஸ்யம்.

வெறும் அமைச்சர் பதவிக்காக மட்டும் அவர் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வரவில்லை. அந்த நோக்கத்துடன் மட்டும் விஜேதுங்கா அவரது கையைப் பிடித்து உள்ளே அழைத்து வரவில்லை. கட்சியில் தமக்கு அடுத்த தளபதியாக காமினியையே வைத்திருக்க வேண்டும், தான் இல்லாவிடினும் கண்டியச் சிங்களவர் ஒருவரே ஐ. தே. க வினதும், நாட்டினதும் தலைமைப் பதவியை வகிக்க வேண்டும் என்ற இலக்குடனேயே அவரைக் கூட்டி வந்தார் விஜே.

ஆகையால் அமைச்சரவை மாற்றத்தின்போது, காமினி வெறும் அமைச்சராக மட்டுமன்றி, பிரதமராகவும் மேல் நிலைக்கு உயர்த்தப்பட்டு முடி சூட்டப்படுவார் என்பதே பித்திய நிலையாக உள்ளது. இதற்கான அதிகாரத்தை ஜனாதிபதி ஏற்கனவே போட்டு வைத்திருப்பதாக கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது. அவர் இது குறித்துத் தமக்கு மிக மிக நெருங்கியவர்களுடன் கதைத்ததாகவும் கூறப்படுகிறது.

விஜேதுங்கா ஜனாதிபதி பதவியை ஏற்றதன் பின்னர், அவரது திட்டங்களுக்கு எதிர்ப்பாகவும் தடையாகவும் இருந்தவர்களில் சிறிசேன கூரேயும், ரணில் விக்கிரமசிங்காவும் முக்கியமானவர்கள். இவர்கள் இருவரும் கூட்டாக நின்று கட்சிக்குள் விஜேதுங்காவுக்கு எதிரான அணி ஒன்றை உருவாக்கி வந்தார்கள்.

### ஜே. ஆரும், டி. பியும் மோதும் கட்டம்

பல முக்கிய விவகாரங்களில் விஜேதுங்காவுக்குப் போட்டியாகவும் இயங்கினார்கள்: அவர் நினைத்த பல காரியங்களைச் செய்ய விடாது தடுத்தும் வந்தார்கள். காமினியை ஐ. தே. கட்சியில் மீண்டும் சேர்ப்பதையும் இருவரும் எதிர்த்தே வந்தனர்.

எப்படியோ, இதுவிடயத்தில் விஜேதுங்கா தமக்குள்ள வல்லமையைக் காட்டி காமினியை உள்ளே கொண்டு வந்துவிட்டார். ஆகையால் சிறிசேனா கூரேயைப் போலவே ரணிலும் ஓரங்கட்டப்படுவார். இது விடயத்தில் ஜே. ஆரும் விஜேதுங்காவும் மோதிக்கொள்வதும் நிச்சயம் என்றும் அரசியல் அவதானிகள் எதிர்பார்க்கிறார்கள்.

காமினி திசநாயக்காவை

**அரசியல்**

தமது பதவிக் காலத்தில், தனது வாரிசாக்க வேண்டும் என்று விரும்பியவர் தான் ஜே. ஆர். ஆனால் இப்போது அவர் ரணிலையே முன்னுக்கும் மேலேயும் கொண்டு வர விரும்புகிறார். உறவு என்று வந்த பின்னர் அடுத்தவை எல்லாம் பின்னர் தானே!

விஜேதுங்காவோ தனக்கு ஆதரவானவர்களை உயர்ந்த நிலையில் வைத்துக் கொண்டு தனது தலைமைத்துவத்தை ஸ்திரப்படுத்தும் நோக்குடனேயே இப்படி எல்லாம் நடத்து கொள்கிறார்!

## 6 மாதங்களில் தன்னை திருத்த முயலும் டி.பியின் அவசரம் பயன் தரமாட்டாது

கட்சி நலனைவிட தமது நலனையே முன்னெடுத்துச் செல்கிறார். இதில் அவர் ஜே. ஆரைவிடவும் பல படிகள் மேலே நிற்கிறார்! அமைதியாக இருந்தவர்; அடங்கிக் கிடந்தவர்; இப்போது ஆவேசத்துடன் செயற்படுகிறார்;

ஆகையால் அமைச்சரவை மாற்றத்துடன் ஐக்கிய தேசியக் கட்சி உடைந்து போகும் ஆபத்து நிச்சயம் என்பதே கொழும்பு எங்கும் பேச்சாக இருக்கிறது.

பிரேமதாசாவின் கொள்கைகளை கடைப்பிடிக்கப்போவதாக எப்படித்தான் காட்டிக் கொண்டாலும், பிரேமதாசா ஆதரவாளர்கள் விஜேதுங்காவை முழு விசுவாசத்துடன் ஆதரிக்கப்போவதில்லை. சிறிசேன கூரே, ரணில் விக்கிரமசிங்கா, பிரேமதாசா ஆதரவாளர்கள் ஆகிய மூன்றாம் பினரும் ஒன்று சேர்ந்து விஜேதுங்காவுக்குத் தொல்லை கொடுக்கப்போவது தவிர்க்கக் கூடியதல்ல என்று கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

★ ★ ★

ஐக்கிய தேசியக் கட்சியில் குழப்பம் ஏற்பட்டுள்ளது போலவே முப்படை உயர் வட்டாரங்களிலும் பெரும் குழப்ப நிலை தோன்றியுள்ளது. அங்கும் ஐ. தே. கட்சிக்கு ஆதரவானவர்கள் சுதந்திரக் கட்சிக்கு ஆதரவானவர்கள் என்று இரண்டு அணிகள் உள்ளனவாம்.

இராணுவ உயர் நிலை, மத்திய நிலை அதிகாரிகள் மட்டத்தில் உள்ள சிலர் எதிரணி (பொ ஐ.மு)சார்பில் வேட்பாளர்களாக நிற்பதற்குக் கூடத் தயாராகிறார்களாம். இவர்கள் யார் யார் என்பதனைக் கண்டு பிடிக்குமாறு அரச உயர்பீடம் புலனாய்வுத் துறையினரைப் பணித்திருப்பதாகவும் அறிய வருகிறது.

வடக்கு - கிழக்கு யுத்த விவகாரத்தில் இராணுவத்துக்கு உரிய மரியாதையும், மதிப்பும் கொடுக்கப்படவில்லை; தாம் கூறும் யோசனைகளை அரச உயர் பீடம் ஏற்றுக் கொள்வதில்லை என்று பல உயர் அதிகாரிகளுக்கு மனக் கொதிப்பு உண்டென்று விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

வடக்கில் பெரும் இராணுவத் தாக்குதல் நடத்திப் புலிகளைப் பலவீனப்படுத்துமாறு கூறிவிட்டு, இப்போது அதனைப் பற்றி அக்கறையில்லாமல் தனது தலைமைத்துவத்தைக் காப்பாற்றும் நடவடிக்கைகளில் விஜேதுங்கா ஈடுபட்டிருப்பது இராணுவ உயர் அதிகாரிகள் பலருக்கு எரிச்சலைக் கொடுத்துள்ளதாம். ஆளுங்கட்சிக் குழப்பம் அக்கட்சிக்கு ஆதரவான அதிகாரிகளிடையேயும் பிரதிபலிக்கிறது என்றும் தகவல் உண்டு.

வடக்கின் யுத்த முனைக்குப் பொறுப்பான முன்னிலை அதிகாரி ஒருவர் — பிரிகேடியர் தரத்தில் உள்ளவர் — யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கல்விமானை அண்மையில் கொழும்பில் சந்திக்க நேர்ந்தது. அப்போது அவர் "இந்தப் போரை நிறுத்துவதற்கு விடுதலைப் புலிகளைப் பேச்சுக்குப் போகுமாறு உங்களைப் போன்றவர்களால் தூண்ட முடியாதா?" என்று கல்விமானிடம் கேட்டிருக்கிறார்.

யுத்தம் அரசாங்கத்தினால் தம்மீது திணிக்கப்பட்ட ஒன்று என்ற சலிப்புடன் பேசிய அந்த உயர் இராணுவ அதிகாரிக்குப் பதிலளித்த கல்விமான், விடுதலைப் புலிகள் பேசவும் யுத்தத்தை நிறுத்தவும் தயார். ஆனால் உங்கள் தேசியக் கட்சிகள் இரண்டுமே அவற்றுக்குப் பின் நிற்கின்றன — என்றவாறு பதிலளித்த போது பிரிகேடியர் மௌனமாக இருந்தாராம்.

இவ்வாறு இராணுவ உயர் பீடமும், ஐக்கியதேசியக் கட்சி

**உதயகாந்தன்**

யைப் போலவே பெரிதும் குழம்பிப் போயிருக்கிறது. இதன் விளைவாக இராணுவக் கூட்டமைப்பில் மாற்றம் நடக்கும் சாத்தியம் உண்டு எனத் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சரவை மாற்றத்தோடு இராணுவக் கட்டமைப்பு, பாதுகாப்பு இணைப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

சூரியகாந்தி
உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

# சிரியா - இஸ்ரேல் ஒப்பந்தம் மூலம் மத்திய கிழக்கில்
# நிரந்தர சமாதானத்துக்கு அமெரிக்கா முயற்சி!

இம் மாதம் 4 ஆம் திகதி இஸ்ரேல் பிரதமர் ரபீனுக்கும் பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாஸீர் அரபாத்துக்கும் இடையில் எகிப்திய தலைநகரான கெய்ரோவில் மற்றும் ஓர் ஒப்பந்தம் கைச்சாத்தானதைத் தொடர்ந்து அமெரிக்காவின் கவனம் சிரியாவின் பக்கம் தீவிரமாகத் திரும்பி உள்ளது.

அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் வாரன் கிறிஸ்தோபர் (Warren Christopher) சிரியாவின் தலைநகர் டமஸ்கஸுக்கும் இஸ்ரேலின் ஜெருசலத்துக்கும், பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைமையகம் அமைந்துள்ள மொரோக்கோவின் டுனிஸுக்கும் பல சுற்றுப் பயணங்களை மேற்கொண்டு பேச்சுக்களை நடத்தி உள்ளார்.

### இஸ்ரேல் கைப்பற்றிய இடங்கள்

1967 ஆம் ஆண்டு இஸ்ரேல் கைப்பற்றிய அரபுப் பிரதேசங்களான சினாய், காஸா, மேற்குக் கரை, கோலான் குன்றுகள் (Golan Heights) ஆகியவற்றை இஸ்ரேல் விட்டுக் கொடுக்க மறுத்து வந்ததே கடந்த காலங்களில் மத்திய கிழக்கில் பதற்றநிலை இருந்ததற்குக் காரணமாக இருந்தது.

### காம் டேவிட் ஒப்பந்தம்

இதில் 1979 காம்ப் டேவிட் ஒப்பந்தம் மூலம் சினாய் பாலைவனத்தை இஸ்ரேல் எகிப்திடம் திருப்பிக்கொடுத்து விட்டது. இதனால் 1948 ஆம் ஆண்டு முதல் எகிப்துக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் இருந்து வந்த நெருக்கடிநிலை நீங்கியது. இரு நாடுகளும் நட்பு நாடுகளாக மாறின.

### அரபாத்–ரபீன் ஒப்பந்தம்

இதே போன்று சமீபத்தில் செய்து கொள்ளப்பட்ட அரபாத் — ரபீன் ஒப்பந்தத்துக்கு இணங்க காஸாவிலும், மேற்குக் கரையில் உள்ள ஜெரிக்கோ நகரிலும் மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்களுடன் பலஸ்தீனர்கள் ஆட்சி செய்ய வழிபிறந்துள்ளது இஸ்ரேல் மீதான பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் போர்ப் பிரகடனமும் முடிவுக்கு வந்துள்ளது:

1967 ஜூன் யுத்தத்தின் முன்னர் காஸா எகிப்தின் வசமும் மேற்குக் கரை ஜோர்தான் வசமும் இருந்தன.

கடந்த 4 ஆம் திகதி செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் காஸாவினதும் ஜெரிக்கோவினதும் வெளியுறவு, பாதுகாப்பு தவிர்ந்த ஏனைய அதிகாரங்களை பலஸ்தீனர்களுக்கு வழங்குகிறது.

### கோலன் குன்றுகள்

தற்போது தீர்வு இன்றி விடப்பட்டிருப்பது சிரியாவின் கோலான் குன்றுகளே.

## கோலான் குன்றுகளைக் கைவிடுவது இஸ்ரேலின் பாதுகாப்புக்கு ஆபத்து

1967 யுத்தத்தின்போது இஸ்ரேல் பெரும் இழப்புகளின் பின்னரே கோலான் குன்றுகளைக் கைப்பற்றி இருந்தது. தனது பாதுகாப்புக்கு சினாய், காஸா, மேற்குக் கரையைவிட கோலான் குன்றுகளே முக்கியமானவை என்று இஸ்ரேல் கருதுகிறது. இதனாலேயே கோலான் குன்றுகளைக் கைவிட இஸ்ரேல் மறுப்புத் தெரிவித்து வருகிறது.

1967 யுத்தத்தின் பின்னர் ஏனைய கைப்பற்றப்பட்ட அரபு பிரதேசங்களைப் போன்று கோலான் குன்றுகளிலும் யூதர்கள் குடியேற்றப்பட்டனர். இவர்களைத் தவிர அங்கு 15 ஆயிரம் டுறூஸ் (Druze) இனத்தவர்களும் வாழ்கிறார்கள் 1967 யுத்தத்தின் போது வெளியேறாது அங்கேயே தங்கி இருந்த டுறூஸ் இனத்தவர்கள் தற்போது ஐந்து கிராமங்களில் வாழ்கிறார்கள். 1981 ஆம் ஆண்டு இஸ்ரேல் சட்டங்கள் கோலான் குன்றுகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டன — டுறூஸ் இனத்தவர்கள் மீது இச் சட்டங்கள் பலவந்தமாகத் திணிக்கப்பட்டன.

கோலான் குன்றுகளில் இருந்து இஸ்ரேல் வெளியேறிவிட்டால் இஸ்ரேலுடன் சமாதானம் செய்து கொள்ளத் தயார் என [illegible] ஜனாதிபதி ஹபேஸ் அஸாத் (Hafez Assad) அறிவித்துள்ளார்—

தம்மைச் சந்தித்த அமெரிக்க அதிபர் பில் கிளிங்டனின் பிரதிநிதி வாரன் கிறிஸ்தோபரிடமும் அவர் இதனையே தெரிவித்திருந்தார்.

கோலான் குன்றுகளில் இருந்து இஸ்ரேல் மூன்று வருட காலத்துக்கு தனது முழுப்படைகளையும் வாபஸ் பெறவேண்டும் என்று ஹபேஸ் அஸாத் கோருகிறார் ஆனால் இஸ்ரேல் இதனை எதிர்க்கிறது

படை வாபஸ் படிப்படியாக நீண்ட கால நேர அட்டவணைப்படி நடக்க வேண்டும் என்கிறது அது.

ஒப்பந்தம் கைச்சாத்தாகி ஐந்து முதல் எட்டு வருட காலத்துக்குள் படை வாபஸ் பூர்த்தியாக வேண்டும் என்றும் இஸ்ரேல் கோருகிறது.

அத்துடன் டுறூஸ் மக்கள் வாழும் மூன்று கிராமங்களை முதலில் சிரியாவிடம் ஒப்படைப்பது மூலம் படை வாபஸை ஆரம்பிக்கமுடியும்

**வெளி உலகம்**

என்றும் இஸ்ரேல் யோசனை தெரிவிக்கிறது.

### ஒரே கல்லில் 2 மாங்காய்

இஸ்ரேலுடன் நேரடி எல்லைகளைக் கொண்டுள்ள அரபு நாடுகளில் சிரியாவே பலம் வாய்ந்த நாடாகக் கருதப்பட்டு வருகிறது.

சிரியாவுக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் சமாதானம் ஏற்பட்டுவிட்டால் லெபனான் பிரச்சினையும் தன்பாட்டில் சுலபமாகத் தீர்ந்துவிடும் என்று அமெரிக்கா கருதுகிறது. நீண்ட கால உள்நாட்டு யுத்தத்தினால் சின்னா பின்னமடைந்துள்ள [illegible] முழுக் கட்டுப்பாட்டிலேயே [illegible]

வில் பாதுகாப்பு வலயம் அமைத்து நிலை கொண்டுள்ள இஸ்ரேல் படைகள் மீது அடிக்கடி தாக்குதல் நடத்தி உயிர்ச்சேதம் விளைவித்து வரும் டுறூஸ் கெரில்லாக்களுக்கு சிரியாவே உதவிகளை வழங்கி வருகிறது.

சிரியாவுடன் ஒப்பந்தம் செய்வது மூலம் லெபனான் பிரச்சினைக்கும் தீர்வுகாண முடியும் என்பதனாலேயே சமாதான முயற்சியில் அமெரிக்க அதிபர் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்.

### தனித்து ஒப்பந்தம் சிரியா எதிர்ப்பு

இஸ்ரேலுடன் தனித்து ஒப்பந்தம் செய்வதை சிரியா நீண்டகாலமாக எதிர்த்து வருகிறது.

யோர்தான், லெபனான், சிரியா, பலஸ்தீன விடுதலை இயக்கம் ஆகியவை ஒன்று சேர்ந்து இஸ்ரேலுடன் பேச்சு நடத்தி ஒப்பந்தம் செய்ய வேண்டும் என்று சிரிய அதிபர் ஹபேஸ் அஸாத் கோருகிறார்.

இப்படியான ஒரு பேச்சுவார்த்தையே அமெரிக்காவின் தலைமையின் கீழ் வாஷிங்டனில் பல இழுபறிகளுக்கு மத்தியில் நீண்டகாலமாகி நடைபெற்றுவந்தது.

ஆனால் பலஸ்தீன விடுதலை இயக்கம் இஸ்ரேல் பிரதிநிதியை நோர்வேயில் ரகசியமாகச் சந்தித்து, எகிப்தின் வழியில் தனித்து ஒப்பந்தம் செய்து கொண்டது.

பலஸ்தீனர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட சுயாட்சி வழங்குவது தொடர்பான ஒப்பந்தத்தை பெரும்பாலான பலஸ்தீனர்கள் எதிர்ப்பதால் அது தோல்வி அடைந்து விடும் என்று சிரிய அதிபர் தெரிவிக்கிறார்.

### 6 மாத இழுபறியின் பின்னர் மீண்டும் ஒப்பந்தம்

இந்த ஒப்பந்தம் முதலில் 1993 செப்டம்பர் 13 ஆம் திகதி பெரும் பிரசாரங்களின் மத்தியில் வாஷிங்டனில் கைச்சாத்திடப்பட்டது.

ஆனால் ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்ட படி, 1993 டிசம்பர் 13 ஆம் திகதிக்கு முன்னர் படை வாபஸை ஆரம்பிக்க முடியாத நிலை இஸ்ரேலுக்கு ஏற்பட்டதால் ஒப்பந்தத்தை அமுல் செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டது. ஒப்பந்தத்தை எதிர்ப்பவர்களின் கையும் ஓங்கியது.

கடந்த 6 மாதங்களாக அமெரிக்காவினதும் ரஷ்யாவினதும் அனுசரணையுடன் பலஸ்தீன விடுதலை இயக்கப் பிரதிநிதிகளும் இஸ்ரேல் பிரதிநிதிகளும் பல சுற்றுப் பேச்சுக்களை நடத்திய பின்பே இம் மாதம் 4 ஆம் திகதி கெய்ரோவில் மற்றும்

**சஞ்சாரன்**

ஓர் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. கடந்த 6 மாத கால வன்செயல்களில் 151 பலஸ்தீனர்களும் 47 இஸ்ரேலர்களும் கொல்லப்பட்டிருந்தனர்

1994 மே 4 ஒப்பந்தத்தின் படி, ஒப்பந்தம் கைச்சாத்தாகி 21 நாட்களில் காஸாவிலும் ஜெரிக்கோவிலும் இருந்து இஸ்ரேல் தனது படைகளில் பெரும் பகுதியை வாபஸ் பெறவேண்டும் யூத குடியிருப்புகளின் பாதுகாப்புக்காக ஒரு சிறிய அளவிலான படையை மட்டுமே வைத்திருக்கலாம்.

### பலஸ்தீன பொலிஸார்

இதற்கு இணங்க இஸ்ரேல் படை வாபஸ் தற்போது பூர்த்தி அடைந்து விட்டது. இஸ்ரேல் படையினருக்குப் பதிலாக பலஸ்தீன பொலிஸார் சேவையில் ஈடுபட்டுள்ளனர்.

அத்துடன் இஸ்ரேல் வசம் உள்ள பலஸ்தீன கைதிகள் விடுதலை செய்யப்பட்டு வருகின்றனர்.

மேற்குக் கரை காஸாவின் இறுதி அந்தஸ்து குறித்த முழு அளவிலான பேச்சை இரண்டு வருடகாலத்தில் ஆரம்பிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

பலஸ்தீனர்களின் சுயாட்சிக்கு உட்படுத்தப்பட உள்ள ஜெரிக்கோவின் விஸ்தீரணம் குறித்து கடைசியாக நடைபெற்ற பேச்சுவார்த்தையிலும் இணக்கம் ஏற்படவில்லை.

### யூதக் குடியிருப்பு

1967 யுத்தத்தில் கைப்பற்றிய பிரதேசங்களில் இருந்து இஸ்ரேல் தனது படைகளை வாபஸ் பெறுவதற்கு தடையாக இருப்பது இஸ்ரேலின் பாதுகாப்பும் பிரச்சினையும் யூதக்குடியிருப்புகளுமே.

மேற்குக்கரையில் ஆகக் கூடுதலாக ஒருலட்சத்து 35 ஆயிரம் யூதர்கள் குடியேற்றப்பட்டுள்ளனர்.

காஸாவில் 5 ஆயிரம் யூதர்கள் குடியேற்றப்பட்டுள்ளனர் கோலான்குன்றுகளில் 13 ஆயிரம் யூதர்கள் குடியேற்றப்பட்டுள்ளனர்.

120 அங்கத்தவர்களைக் கொண்ட இஸ்ரேல் நாடாளுமன்றத்தில் பிரதமர் ரபீனின் கூட்டரசுக்கு ஒரு பெரும்பான்மை மட்டுமே இருந்து வருகின்றது.

ஆகவே ரபீனின் காலத்திலேயே கோலான்குன்றுகள் பிரச்சினையையும் சமாதானமாகத் தீர்த்து வைப்பதில் அமெரிக்கா அவசரம் காட்டுவதில் வியப்பில்லை.

★

**சீதனம் உனக்குச் சிலந்தி வலை --அதை**
**தீயிட்டுக் காணுவோம் புதிய நிலை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### செல்லப்பா நல்லையா

(உரிமையாளர் கமலா ஸ்ருடியோ கிளிநொச்சி)

மட்டுவிலை பிறப்பிடமாகவும் கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா நல்லையா காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் மகனும் அன்னம்மாவின் அன்புக் கணவரும், பிறேம்நாத், திருமதி மாலா குகதாசன் (பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை), திருமதி கலா யோகேந்திரன் (கட்டட திணைக்களம் கொக்குவில்), திருமதி லதா சிவஞானம், ரகுநாத் (பொறியியல் பீடம் 1 ஆம் வருடம் பேராதனைப் பல்கலைக்கழகம்) கோபிநாத் (மாணவன் கனகபுர மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிறீமதி, யோகேந்திரன் (இரசாயனப் பகுதி யாழ். பல்கலைக்கழகம்), குகதாசன் (தொழில் நுட்பவியலாளர்), சிவஞானம் (ஆசிரியர் கிளிநொச்சி) ஆகியோரின் மாமனாரும், அபிராமி, பகீரதி, சகிரேகா, தர்சிகா, லகுவனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் 22-5-94 ஞாயிற்றுக்கிழமை 10 மணியளவில் 8 A, கலட்டி அம்மன் வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மு. யோகேந்திரன்
(மருமகன்)

A8, கலட்டி அம்மன் வீதி,
கே. கே. எஸ்; வீதி
யாழ்ப்பாணம். (31000)

### ச. கௌரிசங்கர சர்மா

(நவிண்டில் ஐயா)

ஆவரங்காலைச் சேர்ந்த ச. கௌரிசங்கரசர்மா அவர்கள் (21 - 5 - 94) நேற்று காலமானார்.

அன்னார் நவிண்டில் சதாசிவசர்மா — இராசம்மா தம்பதிகளின் புதல்வரும், நாகபூஷணி அம்மாவின் கணவரும், ஆவரங்கால் நாராயணசாமிக் குருக்களின் மருமகனும், சண்பகவல்லி, உபேந்திரசர்மா, நவரஞ்சனி, அகிலாண்டேஸ்வரி ஆகியோரின் தந்தையும், ஜெயபாலசர்மா (உள்ளூராட்சித் திணைக்களம், மல்லாகம்), சந்திரிகா, சண்முகராஜசர்மா (கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் நேற்று சனிக்கிழமை (21-5-94) மாலை ஆவரங்காலில் நடைபெற்றன.

தகவல்
குடும்பத்தினர்

சிவன் கோவிலடி,
ஆவரங்கால்,
புத்தூர். [31023]

### கனகசபை காந்தரூபசிங்கம் (காந்தா)

காந்தரூபசிங்கம் (காந்தா) 14-05-94 இல் பிரான்சில் காலமானார்.

இவர் வேலணை கிழக்கைச் சேர்ந்த பசுபதி-கனகசபை, காலம் சென்ற அன்னபூரணியின் அன்பு மகனும், பத்மாவதியின் அன்புக் கணவரும், கமல்ராஜ், கமல்ஜித், கமல்நாத் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற யூலிஸ், மெனிக்கா ஆகியோரின் மருமகனும், சறோஜினிதேவியின் அன்புச் சகோதரரும், சித்திராதேவி, பந்துசேனன், ஜெயசேனன், தர்மசேனன், கருணதாஸ், பிறேமளா, ரவீந்திரநாதன், வேதநாயகம் (கச்சேரியடி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பிரான்சில் நடைபெற்றன. உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி கா. பத்மாவதி
(மனைவி)
பசுபதி - கனகசபை
(தந்தை)

இல. 2, கிராம
விஸ்தரிப்புத் திட்டம்,
பாற்பண்ணை வீதி,
திருநெல்வேலி. (31038)

## ஆளும் கட்சிக் குழப்பம்...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

புக் குழு, பாதுகாப்பு அமைச்சு என்று எல்லா இடங்களிலும் மாற்றம் வரும் என்று அவதானிகள் எதிர்பார்க்கிறார்கள். அரச நிர்வாகத்துறையில் இப்போது நாளாந்தம் அதிகாரிகள் மாற்றம் நடந்து வருகிறது; உயர் அதிகாரிகள் பலரும் எப்போது தமது பதவி பறிபோகுமோ என்ற ஏக்கத்தினால் கடமை புரிவதில்லை. பேருக்குச் சம்பளம் எடுப்பதற்காக அலுவலகம் வந்து போகிறார்கள். நிர்வாகத் துறையில் நடப்பது போல படைகளிலும் அதிகாரிகள் மாற்றம் நிச்சயமாம்.

இந்த மாற்றத்தின்போது பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா, இராணுவத் தளபதி ஜெரி டி. சில்வா ஆகியோர் உட்படப் பலர் ஓரங்கட்டப்படுவர் என்ற தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன. மேஜர் ஜெனரல் லக்கி அல்கமவும் அந்தப் பட்டியலில் சேர்க்கப்படுவார்.

மொத்தத்தில் ஆளுங்கட்சியினில் குழப்பம். அது உடைந்து போகும் அளவுக்கு உட்பூசல் உச்சக்கட்டத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. அமைச்சரவை மாற்றத்துடன் பிளவு பெரிதாகும். அதே சமகாலத்தில் இராணுவக் கட்டமைப்பும் மாறும்.

★ ★ ★

காமினியை பிரதமரும் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சராகவுமோ அல்லது பிரதமரும் இனவிவகார அமைச்சராகவுமோ நியமிக்க இருப்பதன் பின்னணி, இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை அமுல் செய்வதற்கே என்று அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

காமினி திசநாயக்கா மீண்டும் ஐக்கிய தேசியக்கட்சியில் சேர்க்கப்பட உள்ளார் என்ற தகவல் வெளிவந்த ஆரம்பத்திலேயே, இந்தவகை அனுமானிப்பு ஒன்றும் கூடவே வந்தது.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை உருவாக்குவதில் ஜே. ஆருக்கு உதவும் கரமாகத் திகழ்ந்தவர் காமினி. ஆகையால் அவர் அரசாங்கத்துக்குள் போய்விட்டால் இந்தியாவை மிக நெருக்கமாகக் கொண்டு வந்து, விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்தி விடுவார் என்றும் பேசப்பட்டது.

இந்தியா விடுதலைப் புலிகளுடன் பகைமை பாராட்டுவதால், அதனது உதவி பெற்று புலிகளை ஒடுக்க முடியும் என்ற கருத்து சிங்கள அரசியல்வாதிகள், மற்றும் சில சாராரிடம் நிலவுகிறது. ஸ்ரீலங்கா இராணுவம் தனித்து விடுதலைப் புலிகளை ஒடுக்கிவிட முடியாது என்ற [illegible]

மீண்டும் இந்திய உதவி என்ற ஆசை தோன்றியுள்ளது.

தமிழர்களுக்கு இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் உள்ளதைவிட எதுவும் வழங்கப்படக்கூடாது என்ற நிலைப்பாடு உடையவர் ஜே. ஆர். இந்திய இராணுவத்தைத் திருப்பி அனுப்பியது மிகப் பெரும் தவறு என்று தெரிவித்தவரும் அவரே. காமினி திசநாயக்காவும் அந்தக் கருத்துடையவராகவே இருக்கிறார்.

ஆனால் தேர்தலுக்கு முன்னர் இனப்பிரச்சனையைத் தீர்க்கக் கூடியதாக இந்தியாவின் உதவியைப் பெறுவதும், விஜயதுங்கா நினைப்பது போலக் காரியத்தை சாதிப்பதும் அவ்வளவு இலகுவானதல்ல. இந்த விடயத்தில் அவசரப்பட்டோ அல்லது ஒன்றுக்குப் பல தடவைகள் சிந்திக்காமலோ இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் செயற்படமாட்டார். அவர் ஒரு முதிர்ந்த அரசியல்வாதி ராஜீவ் காந்தியைப் போல சன புத்தியுடன் நடக்கமாட்டார்.

### கடைசி நேரப் பயிற்சி

இனப் பிரச்சினையை தேர்தலுக்கு முன்னர் தீர்த்து, தாம் பெரும் கெட்டிக்காரன் என்று சிங்கள வாக்காளருக்குக் காட்ட நினைப்பது போலவே—

விஜேதுங்கா தாம் வல்லமையும், திறமையும் உள்ள அரசியல் தலைவன் என்று எதிர்வரும் ஆறு மாத கால நடவடிக்கைகள் மூலம் காட்டிக்கொள்ளத் திட்டமிட்டிருக்கிறார். கடைசி நேரப் பயிற்சிக்கு முனைகிறார்;

அந்த வகையிலே அவர்—

★ ஐக்கியதேசியக் கட்சியை தனது கட்சியாக்குவதற்கான அரசியல் உத்திகளில் ஈடுபடுகிறார். தமக்கு எதிரானவர்களை ஓரங்கட்டி, தனிக்காட்டு ராஜாவாக திகழக் கூடிய விதத்தில் காய்களை நகர்த்துகிறார்.

★ கட்சிக்குள்ளும், நிர்வாகத் துறையிலும் இராணுவத்திலும் தமக்குப் பிடிக்காதவர்களையும், கட்சி எதிரணி ஆதரவாளர்களையும், எதிர்க்கட்சி ஆதரவாளர்களையும் களையெடுத்து சுத்திகரிப்புச் செய்கிறார்; இனியும் செய்யப் போகிறார்.

★ லஞ்சம் ஊழல் என்பனவற்றில் தமது கை சுத்தமானது என்றும் கறைபடியாதது என்றும் காட்டுவதற்கான நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருக்கிறார். லஞ்ச விசாரணை ஆணைக்குழு என்ற பேச்செல்லாம்; அதற்காகமுற்றாய்ப்பே.

★ அரசியல் கொலைகள், கொள்ளைகளின் பின்னால் தான் நிற்கவில்லை என்றும் பாதாள உலகத்துக்கும் தனக்கும் தொடர்பில்லை என்றும் காட்டி அதற்கு உடந்தையாக இருந்தவர்கள் என்று சிலர் மீது கறுப்புப் புள்ளி வைத்து, பழிவாங்கவும் ஏற்பாடுகளைச் செய்கிறார்.

★ இவை எல்லாவற்றுக்கும் மகாக, பணம் இருக்கிறதோ, இல்லையோ டிசம்பருக்குப் பின்னர் அதைப் பற்றி யோசிக்கலாம் என்று கூறி, மக்களுக்கு வாழ்க்கை நன்மைகளைச் செய்வதாகக் காட்டும் விதத்தில் விலை குறைப்பு, வரிவிலக்கு என்பவற்றை நாளாந்தம் அறிவித்து வருகிறார்.

அடுத்து வரும் ஆறு மாதங்களுக்குள் மேற்கண்ட நடவடிக்கைகளை முடுக்கி விடுவதால், மக்கள் தமக்கு வாக்களிப்பார்கள் என்றும் தாம் மீண்டும் ஜனாதிபதியாகலாம் என்றும் டி. பியார் கற்பனை செய்கிறார்.

அவரது கற்பனை, ஆகாயக் கோட்டையாகவே முடியும். இம்முறைத் தேர்தலில் எதிரணி வெல்வதை இவர் என்ன பாடுபட்டும் தடுக்க முடியாது. சிங்கள மக்கள் அது குறித்து தீர்மானித்துவிட்டார்கள் என்று அரசியல் அவதானிகள் அடித்துக் கூறுகிறார்கள். பதினேழு வருடகால ஐ. தே. க. ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்பது சிங்கள மக்களின் முடிந்த முடிபாக இருப்பதை இலகுவில் அவதானிக்க முடிகிறது. ★

## மரண அறிவித்தல்

### அக்னேஸ் ரோஸ் பொன்மணி

21 ஆம் திகதி கொடுக்கப்பட்ட மரண அறிவித்தலின்படி அன்னாரின் பூதவுடல் இன்று ஞாயிற்றுக்கிழமை பி. ப. 3.00 மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து புனித மரியாள் பேராலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கற் திருப்பலியின் பின் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்;

தகவல்:
S. மேரி யோசப்
(கணவன்)

87, மாட்டின் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (31037)

## மரண அறிவித்தல்கள்

### சீவரத்தினம் காமாட்சி அம்மா

வேலணை மேற்கை சேர்ந்தவரும் தற்போது இருபாலை கற்பகப் பிள்ளையார் கோவிலடியில் வசிப்பவருமாகிய திருமதி சீவரத்தினம் காமாட்சி அம்மா 20 - 5 - 1994 இல் காலமாகிவிட்டார்.

இவர் சீவரத்தினத்தின் அன்பு மனைவியும், அமிர்தவல்லி, காலஞ்சென்ற திரிலோகநாதன், சிவஜோதி, தாண்டவநாதன், சபாநாதன், வள்ளிநாயகி ஆகியோரின் அன்புத் தாயாரும், இரத்தினேஸ்வரக்குருக்கள், தியானந்தராஜாக்குருக்கள், தியாகேஸ்வரி, பானுமதி ஆகியோரின் அன்பு மாமியாரும், விக்கினேஸ்வரன், அமுதேஸ்வரி, பரமேஸ்வரா, சாந்திமதி, மகேஸ்வரா, சிவதர்சினி, தனுஜா, பிரசாத், கோகுலன், கஜலக்சன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 22 - 5 - 94 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு இருபாலை இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஏ சீவரத்தினம்
(கணவர்)

கற்பகப்பிள்ளையார் கோவிலடி,
இருபாலை, கோப்பாய். (31035)

### திருமதி ஆசீர்வாதம் - இராசேஸ்வரி

நீதிமன்ற வீதி மல்லாகத்தை பிறப்பிடமாகக் கொண்ட ஆசீர்வாதம் இராசேஸ்வரி அப்புத்தளையில் 18 - 5 - 94 இல் அகால மரணமானார்.

இவர் ஆசீர்வாதத்தின் அன்பு மனைவியும், மைக்கேல் - எலிசபேத்தின் அன்பு மகளும், கொன்செப்ரா (ஆசிரியர். அப்புத்தளை), மேரிகொலஸ்ரிக்கா, ஜெனிஸ்ரா, கனிஸ்ரா, மேரிசுற்றறீன் (மாணவி - மல்லாகம் மகா வித்தியாலயம்), மைக்கல் வைற் (சுவிஸ்), றஜீதரன் (அப்புத்தளை) இவர்களின் அன்புத் தாயாரும், சதானந்தராஜா (ஆசிரியர், தப்புத்தளை), ஜோன்சன் (சவுதி அரேபியா) ஆகியோரின் மாமியும், டிபோன், டயானா, சியாமளா, தர்சினி, ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கிறிஸ்தராஜா (மாவட்ட நீதிமன்றம் யாழ்ப்பாணம்), தேவராஜா (சுவிஸ்), செல்வராஜா (பிரான்ஸ்), தவராஜா (கொழும்பு), ஞானத்தம்மா, அமலஉற்பவநாயகி, லூபினா ஆகியோரின் அன்புச் சகோதரியும், பேதுறுப்பிள்ளை - மேரிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகளும், இராசநாயகி, சிங்கராசா, தேவராசா, ஜசிந்தாராணி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு அப்புத்தளையில் நடைபெறும். விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்;

தகவல்;
பே, ஆசீர்வாதம்
(கணவன்)

நீதிமன்ற வீதி,
மல்லாகம். (7206)

### துரைராஜா நித்தியானந்தன்

(பிரபல ஒலிப்பதிவாளர்)

பிரபல ஒலிப்பதிவாளர் துரைராஜா நித்தியானந்தன் 21-5-94 இல் காலமானார்.

அன்னார் புஷ்பதேவியின் அன்புக் கணவரும் செல்லத்துரையின் மருமகனும், தேவானந்தன் (டன்னா) சகிலா, ரமணா ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வகாந்தராஜா (சங்கானை), செல்வராஜா (சிலவிங்கப் புளியடி), தங்கராணி கிருஷ்ணபிள்ளை, யோகேஸ்வரி ராஜசேகரம் (ஆசிரியை புனித மரியாள் வித்தியாலயம் யாழ்ப்பாணம்), இந்திராணி நடராஜா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (22-5-94) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்;
மனைவி

ஸ்ரான்லி வீதி,
(ஸ்ரீதர் தியேட்டர் முன்)
யாழ்ப்பாணம். (31032)


ஒரு திருவிழா ஒரு பெருவிழா

1994 மே 23, 24, 25 1994 மே 23, 24, 25

நாளை ஆரம்பமாகிறது

திருமறைக் கலாமன்றம்

நடத்தும்

★ தமிழ் விழா ★

காலை நிகழ்வு
நாவலர் மண்டபம்
******
(காலை 9-00 — 12-30)

◎ கருத்தரங்கு
24 - 05 - 1994
"கவிதை பற்றிக் கதைப்போம்"
25 - 05 - 1994
"புனை கதையாளரோடு ஒரு பொழுது"
◎ பிரபல கவிஞர்கள், கதாசிரியர்களின் கருத்துரைகள்
◎ கலந்துரையாடல்

◎ நாடகங்கள் ◎
'ஔவையார்' 23 - 05 - 1994
'கும்பகர்ணன்' 25 - 05 - 1994

மாலை நிகழ்வு
மன்ற அரங்கு
******
தினமும்
மாலை 6-30
◎ கருத்தரங்குகள்
◎ சிறப்புரைகள்
◎ நடனங்கள்
◎ வில்லிசை
◎ நவரச காட்சிகள்
◎ இசைவிருந்து

கவிஞர்களே! கதாசிரியர்களே!! கலைஞர்களே!!! ஆர்வலர்களே!!!!

அனைவரையும் அழைக்கின்றோம்

(இ-8200)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) [illegible] 22 - 05 - 1994 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org